ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆடி
ஜூலை — 1978



விலை 85 காசு

ாமகிருஷ்ண மடம்,
லாப்பூர் :: சென்னை-600 004.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	**ரூ. 8**
ஆயுள் சந்தா	**ரூ. 100**
தனிப் பிரதி	**85 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004

எங்கள் தமிழ் நூல்கள்

I. ஸ்ரீராமகிருஷ்ணர் :

	ரூ.	பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சீடர்களும்	11	00
,, ,, காலிகோ	12	50
ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம் (முதல் பாகம்)	8	00
,, (இரண்டாம் பாகம்)	8	00
,, (இரண்டு பாகமும்)	15	00
ஸ்ரீ ராமகிருஷ்ணரது திவ்விய சரிதப் பாடல்	4	00
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	8	00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்	2	75
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபநிஷதம்	1	50
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	2	00
குருதேவர் வாக்கியம்	1	25
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கதை	0	35

II. சுவாமி விவேகானந்தர் :

	ரூ.	பை
இந்தியப் பிரசங்கங்கள்	4	50
,, ,, காலிகோ	6	00
ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்	3	00
சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள்	6	00
,, ,, காலிகோ	7	00
இராஜயோக உரைகள்	2	50
அருளுரை	1	75
கல்வி	2	50
பாரதப் பெண்மணிகள்	2	50
கருமயோகம்	2	00
பக்தியோகம்	1	50
தற்கால இந்தியா	1	00
எனது வாழ்வும் பணியும்	0	85
எனது குருநாதர்	1	25
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	60
எனது போர்முறை	0	75
சிகாகோ பிரசங்கம்	1	00
விவேகனாந்தர் பாதையிலே....	0	50

III. ஸ்ரீ சாரதாதேவியார் :

	ரூ.	பை
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	1	50
தூய அன்னையார் ஸ்ரீ சாரதாமணி தேவியார்	1	25

IV. இதர நூல்கள் :

	ரூ.	பை
ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3	00
சுவாமி ராமகிருஷ்ணானந்தர்	3	50
மகான் துர்க்காசரண நாகர்	1	50
திரு அருள்மொழி	6	00
இந்துமத ஸாரம்	3	00
பக்தி ஸாரம்	2	25
பக்தி மார்க்கம்	1	00
கடோபநிஷதம் (நாடகம்)	2	00
வேதாந்த ஸாரம்	1	25
,, காலிகோ	2	00
பஜனாவளி	5	00
நடராஜ வடிவம்	0	35
ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம்	0	20
ஆராத்ரிகம்	0	20

V. முரசு நூல்கள் : (பாக்கட் சைஸ்)

	ரூ.	பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞான முரசு	0	80
ஸ்ரீ சாரதாதேவியாரின் அன்பு முரசு	0	80
ஸ்ரீ விவேகானந்தரின் வீர முரசு	0	80
இயேசு கிறிஸ்துவின் அருள் முரசு	0	80
ஸ்ரீ சங்கரரின் வேதாந்த முரசு	0	80

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்களுக்கு, சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் எல்லா வெளியீடுகளின்மீது 5% கழிவு தரப்படும். நூல்கள் அனுப்புமாறு எழுதும் கடிதங்களில் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்ணையும், கழிவு நீக்கி நூல்களை விற்பனைக்குப் பெற விரும்புவதையும் குறிப்பிடக் கோருகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் : தொகுதி 1—10

சுவாமி விவேகானந்தர் பேசியவை, எழுதியவை அனைத்தும் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அவற்றுள் 4, 6, 7, 9 ஆகிய நான்கு தொகுதிகளும் கைவசம் இல்லை. ஏனைய ஆறு தொகுதிகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு தொகுதியும் 500 பக்கங்களுக்குக் குறையாதது.

சாதா பைண்டு விலை ரூ. 5-00 காலிகோ பைண்டு ரூ. 6-50

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர், சென்னை—600 004

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58	ஜூலை 1978	இதழ்—7

பொருளடக்கம்

சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 8001 முதல் 8123 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 8ஐ ஜூலை மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா எண் 9001 முதல் 9303 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 10,000 முதல் 10,100 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள எண்களுக்கிடையில் உள்ள சிலர், ஏற்கனவே சந்தாவை அனுப்பிப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் புதுப்பித்துக் கொள்ளாத அன்பர்கள் கூடிய விரைவில் சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பெரும்பாலும் நமது பத்திரிகையின் எல்லாச் சந்தாதாரர்களுமே, சந்தாவைப் புதுப்பித்துக் கொள்பவர்களே ஆவர். சந்தாவைக் கூடிய விரைவில் முன்னதாகவே செலுத்துவதால் பல சங்கடங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க முடிகிறது. மேற்கொண்டு சந்தாவைத் தொடர இயலாதவர்கள், அல்லது உரிய காலத்திற்குள் சந்தாவைச் செலுத்த இயலாதவர்கள் — முன்னதாக ஒரு கார்டு எழுதித் தகவல் தெரிவிப்பது எங்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலராக வெளி வருவது வாசகர்கள் அறிந்ததே. இந்த ஆண்டு நவம்பர் மாதம் விஜயம் சிறப்பு மலராக வெளிவர இருக்கிறது.

நிர்வாகி
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

RAMAKRISHNA MATH

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை

—திருமூலர்

தொகுதி 58 | காளயுக்தி ௵ ஆடி ௴ | இதழ் 7

பிரார்த்தனை

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपात्
दह छिन्धि भिन्दीति मां तर्जयत्सु ।
मयूरं समारुह्य माभैरिति त्वं
पुरः शक्तिपाणिर्ममायाहि शीघ्रम् ॥

— श्रीशङ्करभगवत्पादाः

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹ ச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மா பைரிதி த்வம்
புர: ஶக்திபாணிர் மமாயாஹி சீக்ரம் ॥

—ஸ்ரீசங்கரர்

பயங்கரர்களான யமதூதர்கள் கோபத்துடன், ‘பொசுக்கு, வெட்டு, பிள’ என்று (மரண சமயத்தில்) என்னை அதட்டும்போது, தாங்கள் மயில்மீது ஏறிக் கொண்டு, ‘அஞ்சேல்’ என்று அருளி, என் முன்னிலையில் வேலும் கையுமாக விரைவில் வர வேண்டும்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

—கந்தரனுபூதி



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், வித்யாசாகரைத் தாமே நேரில் சென்று சந்தித்தார். அந்தச் சந்திப்பின்போது நிகழ்ந்த உரையாடலின் ஒரு பகுதி இந்த இதழில் இடம் பெறுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர் : பிரம்மத்தைப் பற்றி முழுவதும் அறிந்துவிட்டதாக மக்கள் நினைக்கிறார்கள். ஓர் எறும்பு ஒரு சர்க்கரைக் குன்றினிடம் சென்றது. இரண்டொரு சர்க்கரைத் துணுக்குகளை உண்டதும் அதன் வயிறு நிரம்பியது. இன்னொரு சர்க்கரைத் துணுக்கை வாயில் கவ்விக்கொண்டு அந்த எறும்பு தன் புற்றை நோக்கித் திரும்பி வந்தது. போகும் வழியில் அது, 'அடுத்த தடவை வந்து சர்க்கரைக் குன்று முழுவதையும் அப்படியே என் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிடுவேன்' என்று நினைத்தது. சாதாரண ஜீவன்கள் இப்படித்தான் நினைக்கிறார்கள். 'பிரம்மம் ஒருவனின் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது' என்பதை அவர்கள் அறிவதில்லை. ஒருவன் எவ்வளவுதான் பெரியவனாக இருந்தாலும் சரி, அவனால் பிரம்மத்தை உள்ளபடியே முழு அளவில் ஒருகாலும் புரிந்துகொள்ள முடியாது. சுக தேவரும் அவரைப் போன்ற ரிஷிகளும் பெரிய கட்டெறும்பு போன்றவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களும் மிஞ்சினால் எட்டு, பத்துச் சர்க்கரைத் துணுக்குகளை மட்டும்தான் வாயில் கவ்விக்கொள்ள முடியுமே தவிர, முழுமையும் உண்ண முடிவதில்லை.

சாஸ்திரங்கள் பிரம்மத்தைப் பற்றிக் குறிப்பாகச் சில தகவல்களை மட்டுமே தெரிவிக்கின்றன என்று சொல்லிவிட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் மேலும் தொடர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : சமாதியில் ஒருவனுக்குப் பிரம்மஞானம் ஏற்படுகிறது; பிரம்மத்தின் தரிசனம் உண்டாகிறது. அந்த நிலையில் விசாரம் (விவாதம், ஆராய்ச்சி) செய்தல் அடியோடு நின்றுவிடுகிறது. மனிதன் மௌனியாகிவிடுகிறான்! பிரம்மம் எப்படிப்பட்டது என்று வாயினால் விளக்க அவனுக்குச் சக்தி இல்லாமற் போய்விடுகிறது.

ஒரு சமயம் உப்புப் பொம்மை ஒன்று கடலின் ஆழத்தை அளக்கச் சென்றது. (அனைவரும் சிரித்தனர்.) நீரின் ஆழம் எவ்வளவு என்று பிறருக்குச் சொல்ல அது விரும்பியது. ஆனால் அவ்விதம் கண்டு பிடித்துக் கூற முடியவில்லை. ஏனென்றால் சமுத்திரத்தில் இறங்கியவுடனே அந்த உப்புப் பொம்மை கரைந்து போயிற்று. பிறகு கடலின் ஆழத்தைப் பற்றிய விவரம் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்?

ஒருவர் கேட்டார் : சமாதியில் பிரம்மஞானம் அடைந்த பிறகு ஒருவனால் பேச முடியாதா?

ஸ்ரீராமகிருஷ்ணர் : (வித்தியாசாகர் முதலியோரைப் பார்த்து) சங்கராசாரியார் உலக மக்களுக்குப் போதிப்பதற்காக வித்யா மாயையின் 'நான்' என்ற எண்ணத்தைக் கொஞ்சம் வைத்திருந்தார். பிரம்மத்தின் தரிசனம் கிடைத்த பிறகு மனிதனுல் பேச முடிவதில்லே. பிரம்ம தரிசனம் கிடைக்காத வரையில் விவாதம் நடக்கிறது. வெண்ணெயை உருக்கும்போது சப்தம் உண்டாகிறது. நெய்யாகி உருகிய பின்பு எந்தவிதச் சப்தமும் ஏற்படுவதில்லே. நெய்யில் அப்பத்தைப் பொரிக்கும்போது மீண்டும் சப்தம் உண்டாகிறது. அப்பம் நன்ருக வெந்துவிட்டால் அந்தச் சப்தம் அடங்கிவிடுகிறது. அதைப் போல, சமாதி அடைந்த மனிதன் உலக மக்களுக்குப் போதிப்பதற்காக விவகார உலகத்திற்குக் கீழே இறங்குகிருன். பிறகு மீண்டும் அவன் இறைவனைப் பற்றிப் பேசத் தொடங்குகிருன்.

தேனீ பூவில் உட்காராத வரையில் இரைச்சலிடுகிறது. பூவில் தேனைக் குடிக்கத் தொடங்கியதும் அதன் சப்தம் அடங்கி விடுகிறது. ஆனுல் சில சமயங்களில் அது தேனைக் குடித்த வெறியினுல் இரைகிறது. ஒரு வெறுங்குடத்தை நீருக்குள் அமிழ்த்தும் போது, 'களகள' என்னும் ஒலி உண்டாகிறது. (எல்லோரும் சிரித்தனர்.) ஆனுல் அதி லிருந்து இன்னெரு வெறுங்குடத்தில் தண் ணீரை மாற்றினுல் அப்போது மறுபடியும் சப்தம் கேட்கும்.

பிறகு, மெய்ஞ்ஞானம் பெற்றவனுக்கு இந்த உலகம் முழுவதும் பிரம்மம் என்னும் ஒரே ஒரு பொருளாலேயே ஆக்கப்பட்டிருப்ப தாகத் தோன்றுவதை ஸ்ரீராமகிருஷ்ணர் விளக்கிவிட்டு, கடவுளை அடையும் எல்லா வழிகளும் உண்மையே என்று சொல்லி முடித்தார்.

வித்யாசாகர் : கடவுள் சிலருக்கு அதிகச் சக்தியையும் மற்றும் சிலருக்குக் குறைந்த சக்தியையும் கொடுத்திருக்கிருரா என்ன?

ஸ்ரீராமகிருஷ்ணர் : எங்கும் நிறைந்த இறைவன் ஈ, எறும்பு முதலிய எல்லா உயிர் களிலும் குடிகொண்டிருக்கிருர். ஆனுல் அவரது சக்தியின் பிரகாசம் பற்பல உயிர் களிடமும் பற்பல விதமாக (பலவித அளவு களில்) இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் ஒரு மனிதன் பத்துப் பேரைத் தோற்கடிக்கக் கூடியவனுகவும், மற்ருெருவன் ஒருவனைக் கூட எதிர்த்து நிற்க இயலாதவனுகவும் இருப்பது எப்படி? சக்தியில் வேறுபாடு இல்லாவிட்டால் உங்களை எல்லோரும் மதிப் பதற்கு என்ன காரணம்? உங்களுக்கு என்ன இரண்டு கொம்புகளா முளைத்திருக் கின்றன? (அனைவரும் சிரித்தனர்.) உங்களிடம் மற்றவர்களைவிட அதிக அளவில் இரக்கம், படிப்பு முதலியன இருக்கின்றன. ஆகவே மக்கள் உங்களை மதிக்கிருர்கள்; உங்களைப் பார்க்க வருகிருர்கள். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா?

வித்யாசாகர் புன்சிரிப்புச் சிரித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : வெறும் பாண்டித் தியத்தினுல் ஒருவிதப் பயனும் இல்லே. கல்வியின் நோக்கம் பகவானை அடையும் வழியைத் தெரிந்துகொள்வதும், அவரை அடைவதும் மட்டுமே ஆகும்.

கீதையின் உட்கருத்து என்ன? பத்து முறை அதைச் சொன்னுல் என்ன ஏற்படு கிறது? 'கீதா, கீதா' என்பதையே பத்து முறை சொல்வோமானுல் அது 'தாகீ, தாகீ' என்று ஆகிறது. அதன் பொருள், 'எல்லா வற்றையும் ஆண்டவனுக்காகத் துறப்பது' என்பதாகும். கீதையின் உபதேசம் இதுவே: 'மனிதனே! எல்லாவற்றையும் துறந்துவிட்டு இறைவனை அடைய முயற்சி செய்' என்பது தான். ஒருவன் துறவியாக இருந்தாலும் சரி, இல்லறத்தானுக இருந்தாலும் சரி, அவன் தன் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் எல்லாவிதப் பற்றுகளையும் உதிர்த்துவிட வேண்டும்.

விஞ்ஞானி (ஞான முதிர்ச்சி பெற்றவன்) பக்தி பூண்ட மனநிலையைக் கொள் வானேன்? இதற்குப் பதில் 'நான்' என்னும் உணர்ச்சி அகலாதிருப்பதே! சமாதி நிலேயில் 'நான்' என்ற எண்ணம் மறைந்துவிடுவது உண்மைதான். ஆனுல் அது திரும்பவும் வந்துவிடுகிறது. சாதாரண மக்கள் விஷயத்தில் 'நான்' ஒரு நாளும்

மறைவதில்லை. நீங்கள் இன்று அரசமரத்தை வெட்டி எறியலாம்; ஆனால் மறு நாளே திரும்பவும் அதனுடைய புதுக் குருத்துக்கள் கிளம்புகின்றன. (அனைவரும் சிரிக்கின்றனர்.)

ஞானம் அடைந்த பிறகும்கூட எங்கிருந்தோ இந்த 'நான்' என்ற உணர்ச்சி வந்துவிடுகிறது. நீங்கள் கனவில் ஒரு புலியைப் பார்க்கிறீர்கள்; ஆனால் விழித்துக் கொண்ட பிறகும் கனவில் புலியைப் பார்த்ததனால் உங்களுடைய நெஞ்சு 'பட பட' வென்று சிறிது நேரம் வரையிலும் அடித்துக் கொண்டே இருக்கும். நம்முடைய எல்லா விதமான துன்பங்களுக்கும் 'நான்' என்பது தான் காரணம்.

மாடு, 'ஹம் ஹாய்' அதாவது 'நான், நான்' என்று கத்துகிறது; இதுவே காரணமாக அது கஷ்டங்களுக்கு உள்ளாகிறது. ஏரில் பூட்டப்படுகிறது; வெயில், மழை முதலியவை மாட்டை வருத்துகின்றன. கடைசியில் கசாப்புக் கடைக்காரன் அதை வெட்டுகிறான். அதன் தோலைக் கொண்டு செருப்புத் தைக்கிறார்கள்; மத்தளம் செய்கிறார்கள்; மத்தளத்தை ஓங்கி ஓங்கி அடிக்கிறார்கள். (எல்லோரும் சிரித்தனர்.) இதற்குப் பிறகும்கூட அதன் கஷ்டம் ஓய்ந்தபாடில்லை. கடைசியாக அதன் குடல், நரம்பு ஆகியவற்றை உபயோகித்துப் பருத்தியைச் சுத்தம் செய்யும் கருவி (வில்) தயாரிக்கிறார்கள். அப்போது அது 'நான்' என்று சொல்வதில்லை. பஞ்சை அடிக்கும் போது 'துஹு, துஹு' அதாவது 'நீயே நீயே' என்ற சப்தம் உண்டாகிறது. இவ்விதம் சொல்லும்போது அது நிம்மதியான நிலையை அடைகிறது. ''பகவானே! நான் உன் அடிமை, நீயே என் தலைவன்; நான் உன் குழந்தை, நீயே என் தாய்'' என்ற நிலை வந்துவிடுகிறது.

அயலான் வீட்டை நீ உலுக்கினால் உன் வீடு சீக்கிரம் உன் தலையில் விழும்.

—ஸ்விட்ஸர்லாந்து

பிரயாண காலத்தில் தன்னின் மிக்கவரோ, தனக்கு ஒப்பானவரோ துணையாக வாராதிருப்பின், ஒருவன் தானே தனியாக நடப்பது சிறப்பாம். பேதையர் துணை துணையாகாது.

—தம்மபதம்

தாய் தந்தையருக்கும் ஆசிரியருக்கும் எது உகந்ததோ அதையே (பிள்ளை) செய்ய வேண்டும். இந்த மூவரும் மகிழ்ச்சியடைந்தால் போதும், மகன் வேறு தவம் எதுவும் இயற்ற வேண்டாம்.

—மனு தர்மம்

மதம் இன்றி எந்த மனிதனும் வாழ முடியாது. சிலர், தங்களுடைய அகங்கார புத்தியினால், தங்களுக்கும் மதத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது, 'நான் மூச்சு விடுகிறேன்; ஆனால் மூக்கு இல்லை' என்று கூறுவது போலிருக்கிறது.

—காந்தியடிகள்

கெடுக்க வல்லதும், கெட்டவர் தங்களை எடுக்க வல்லதும், மனதை அடக்கத் துணையாவதும் மனமேயாம். மேகங்களை வருவிப்பதும் விரட்டி ஓட்டுவதும் வாயுவின் வேலை ஆவதைப்போல, மோட்சத்தை உண்டுபண்ணுவதும் பந்தத்தை உண்டு பண்ணுவதும் மனதின் வேலையாகும்.

—பிரபுலிங்கலீலை

விஜயதீபம்

நாம ஜபம்

இறைவனுடன் தொடர்பு கொண்டுள்ள சொற்களைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது ஜபம் எனப்படும். அதை விதிமுறைகளுக்கு ஏற்பச் செய்து வருவது சிறந்த ஓர் ஆத்ம சாதனம் ஆகும். ஜபத்திற்குப் பயன்படுத்துவது இறைவனின் திருநாமமாக இருக்கலாம்; அல்லது ஒரு புனித வாசகமாகவும் இருக்கலாம்.

பக்தர்கள், அதிலும் குறிப்பாக வைணவர்கள், 'பகவானின்மீது உண்மையான பக்தி உதித்துவிட்டால், அத்துடன் இறைவனின் திருநாம இனிமையில் ருசியும் பெருகிவிட்டால், ஒரே ஒரு தடவை நாமோச்சாரணம் செய்வதே போதுமானது' என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ ஆதி சங்கரரும் இந்தக் கருத்துக்கு ஆதரவு தருகிறார். 'முற்றிலும் தகுதி வாய்ந்த நல்ல ஓர் ஆத்மசாதகனுக்கு மகாவாக்கியத்தை ஒரே ஒரு முறை கேட்பதே (சிரவணம் செய்வதே) போதுமானது' என்று அவர் கூறுகிறார். ஆனால், 'போதுமான பரிபக்குவம் பெறாத சாதாரணச் சாதகர்கள் திரும்பத் திரும்ப ஜபம் செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது முற்றிலும் அவசியம்' என்றும் ஸ்ரீசங்கரர் குறிப்பிட்டிருக்கிறார்.

பெரும்பாலும் உலகிலுள்ள எல்லா மதங்களுமே இறைவனின் திருநாமத்தை ஜபிக்க வேண்டும் என்பதை முக்கியமான சமய சாதனையாகக் கொண்டிருக்கின்றன. இந்து மதமோ ஜபத்தை நியமம் தவறாமல் பழகி வருவதை மிகப் பெருமளவில் வற்புறுத்திக் கூறியிருக்கிறது.

ஆன்மிகச் சாதனைகளைச் சாஸ்திர ரீதியில் முதல்முதலாக ஆராய்ந்து நூல் வடிவில் அமைத்தவர் பதஞ்ஜலி முனிவரே ஆவார். அவர் தமது யோகசூத்திரத்தில், *ஜப மந்திரத்தைப் பல முறையும் உச்சரிப்பதுடன் அந்த மந்திரம் குறிப்பிடும் பொருளையும் சிந்திப்பது ஆன்மிகச் சாதனைகளில் முறையான மிகவும் நல்ல ஒரு வழி என்று அங்கீகரித்திருக்கிறார்.

அத்வைத வேதாந்தத்திலும்கூட ஜபத்தை, சுத்த தியானத்திற்குப் பூர்வாங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பலவேறு ஆன்மிகச் சாதனைகளும் பல்வேறு விதங்களில் நமது உள்ளத்தை இறைவனை நோக்கிச் செலுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. அவற்றைத் தராதரப் படுத்தி 'மகாநிர்வாண தந்திரம்' பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> ''பிரம்மத்தில் லயித்திருப்பது (பிரம்ம ஸத்பாவம்) தலைத்தரமானது. தியானம் நடுத்தரமானது. பிரார்த்தனையும் ஜபமும் கடைத்தரமானவை. புற வழிபாட்டுக்கு உரிய பூஜைக் கிரியைகள் கடைத்தரத்திலும் கடைத்தரமானவை.''

---

* தஜ்ஜபஸ் ததர்த்தபாவநம்
— பதஞ்ஜலி யோக சூத்திரம் 1-28.

இதே கருத்தைத் 'தந்திரஸாரம்' கீழிலிருந்து மேலாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறது :

"பிரதிமைகளைக் கொண்டு (விக்கிரகங்கள், படங்கள், சக்கரங்கள் முதலிய வரிசையில் இடம் பெறும் சின்னங்கள்) பூஜை செய்வது முதலாவது ஆரம்பநிலை ஆகும். ஜபமும் பிரார்த்தனையும் நடுத்தரமானவை. மானஸ பூஜை உத்தமமானது. 'நானே அவன் - ஸோஹம்' என்னும் வழிபாடு உத்தமத்திலும் உத்தமமானது."

பாமரர்களாகவும் ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்களாகவும் உள்ளவர்களுக்காக அமைந்த புராணங்களில் ஜபசாதனையை மிகவும் பாராட்டிக் கூறியுள்ளனர். இதைச் சிவ தர்மம் என்ற நூலில் பின்வருமாறு காணலாம் :

"ஜப நிஷ்டன் எவனோ அவன் இரு பிறப்பாளர்களாகிய அந்தணர்களுள் சிரேஷ்டன் ஆவான். ஏராளமாக யாகங்களையும் யக்ஞங்களையும் இயற்றிய பலனை அவன் எய்துகிறான். எல்லா விதமான வேள்விகளையும் செய்து முடிப்பதனால் பெறக் கூடிய மிகப் பெரிய பயனை ஜபத்தின் மூலமே அடையலாம்."

ஆத்ம சுத்திக்காகவும் பகவத் சாட்சாத்காரத்திற்காகவும் இடையறாது ஜபம் செய்வது மிகவும் பயனுடைய சாதனை என்று யோகசூடாமணி உபநிஷதம் வற்புறுத்திக் கூறுகிறது.

யாகயக்ஞங்களைச் செய்வது சிலருக்கு மட்டுமே சாத்தியமாகும். ஆனால் ஜப யக்ஞமோ அனைவருமே கடைப்பிடிக்கக் கூடியதாக விளங்குகிறது.

"பகிரங்கப்படுத்தாமல் செய்யப்படும் தானம், படித்தவன் என்ற மமதைக்கு ஆளாகிவிடாமல் ஒருவன் பெற்றுள்ள நிறைந்த கல்வியறிவு, பிறர் அறிய வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர்த்து இரகசியமாகச் செய்யப்படும் ஜபம் - ஆகிய இம் மூன்றும் எல்லையற்ற நன்மைகளைப் பலனாகத் தருகின்றன" என்று அங்கிரஸ் என்ற முனிவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தியாவந்தனம், ஸ்நானம், ஜபம், ஹோமம், தேவதைகளை வழிபடுதல், அதிதிகளை உபசரித்தல் ஆகியவற்றைத் தனது கடமையாக ஒருவன் கட்டாயம் செய்து வரவேண்டும். இவற்றுள் ஜபம் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஜபமும் ஒரு யாகக் கிரியை போன்றதுதான். ஆனால் அது அக்கினியில் அர்ப்பிக்கப்படாத ஒரு யாகக்கிரியையாக விளங்குகிறது, அவ்வளவுதான்.

ஜபத்தைப் பற்றிய குறிப்பு, மிகவும் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய வேதங்களிலேயே காணப்படுகிறது. ஸ்வாத்யாயம் என்பது வேதங்களைத் திரும்பத் திரும்ப ஓதுவதாகும். இந்தப் பயிற்சி, பழங் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. உபநிஷதக் கருத்துக்களை ஆழ்ந்து மீண்டும் மீண்டும் சிந்திக்கும்படி (ஆவிருத்தி செய்யும்படி) வேதங்கள் விதித்திருக்கின்றன.

வேத மந்திரங்கள் பலவற்றுள் காயத்திரி மந்திரம் தனிச் சிறப்பிடத்தைப் பெற்றிருக்கிறது. புராதன காலம் முதற்கொண்டு மக்கள் அந்த மந்திரத்தை ஜபத்திற்கு ஏற்ற சிறந்த மந்திரமாகக் கருதிப் பழகி வருகிறார்கள்.

மந்திரங்கள் சக்தி மிகுந்தவை என்பது வைதிக மக்களின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. ஒவ்வொரு மந்திரமும் தனக்கு உரிய தேவனையே தன்னுள் கொண்டிருக்கிறது. 'மந்த்ராத்மகோ தேவ:' என்று கர்ம காண்டத்தைப் பின்பற்றிய மீமாம்ஸகர் கருதினர். மந்திரம் அல்லாத வேறு தேவனை அவர்கள் ஏற்கவில்லை. 'பிரம்மம் என்பது சப்தத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை' என்று அவர்கள் கருதினர். 'குறிப்பிட்ட ராகங்களுக்குக் குறிப்பிட்ட வடிவங்கள் உண்டு' என்று இந்திய சங்கீதக் கலை கூறுகிறது. எனவே மந்திரங்களைக் குறித்து

மீமாம்ஸகர்கள் கொண்டுள்ள கொள்கையை எளிதில் புறக்கணிப்பதற்கில்லை.

உயர்ந்த சாதகர்கள் தாம் பயன்படுத்திய மந்திரத்தோடு தொடர்புடைய தெய்வங்களின் காட்சியைக் கண்டுள்ளனர். கடவுளுடனே மெய்ஞ்ஞானம் எய்திய மகானுடனே புண்ணியவான்களுடனே தொடர்புள்ள சொல்லுக்கு ஆன்மிகச் சக்தி அமைந்திருக்கிறது, என்பதும் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

பெரும்பாலும் காதால் கேள்விப்படும் விஷயங்களையொட்டியே மக்களின் சிந்தனைப் போக்கு அமைகிறது. இந்த உண்மையைத் தழுவி மந்திர சாஸ்திரம் செயற்படுகிறது. ஜபம் செய்யச் செய்ய நம்மிடம் இறைவனைக் குறித்து ஒரு சிந்தனைத் தொடர்பு ஏற்படுகிறது. இதன் பயனாக மனம் தெய்விகம் தோய்ந்ததாக ஆகிவிடுகிறது.

பரிசுத்தமும் புனிதமும் நிறைந்த தெய்விக உணர்வு கொள்வதே ஆன்மிகச் சாதனைகளின் நோக்கமாகும். அத்தகைய உணர்வு பெறுவது மிகப் பெரிய ஆத்மலாபமாகும். இந்தக் காரணத்தினால்தான் பஜனையும் பாராயணமும் சாதகர்களுக்குப் பெரும் துணைகள் ஆகின்றன.

''சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவன் உள் மூச்சு வாங்கும்போதும் வெளிமூச்சு விடும் போதும் 'ஸோஹம்' என்ற மந்திரத்தை ஒரு நாளைக்கு 21,600 தடவைகள் இயல்பாகவே உச்சரிக்கிறது'' என்று தாந்திரிகச் சித்தர்களும் யோகிகளும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பயிற்சியை அறியாத நிலையில் உணர்வு இன்றித் தன் போக்கில் இயங்கும் படிச் செய்வதற்குப் பதிலாக, உணர்வுடன் மேலும் சிறப்பாக நடைபெறும்படி செய்யலாம் என்று அவர்கள் கூறுகிறார்கள். இவ்விதம் செய்யும் ஜபம் 'அஜபா ஜபம்' எனப் படுகிறது.

ஜபம் செய்யும்போது அதைக் குறிப்பிட்ட தடவைகள் செய்ய வேண்டும் என்பது விதி. 'எத்தனை தடவைகள் என்ற கணக்கு வைக்காமல் செய்யப்படும் ஜபம் பலனைத் தராமல் போய்விடுகிறது' என்று அங்கிரஸ் கூறியுள்ளார். 'பெரியோர்கள் விதியாகக் குறிப்பிட்டுள்ள இத்தனை தடவைகள் ஜபம் செய்வது என்ற கணக்கை வைத்துக் கொள்ளாமல் செய்யும் ஜபம் ஒருநாளும் பயனைத் தராது' என்று குலார்ணவம் (தந்திரஸாரம்) என்ற நூலும் கூறுகிறது. 'ஜபத்தை எண்ணிக்கையுடனேயே இயற்ற வேண்டும்; புத்தியுள்ளவன் கணக்கு வைத்துக்கொள்ளாமல் ஜபம் செய்யவே மாட்டான்; இத்தனை என்ற எண்ணிக்கை இல்லாமல் செய்யும் ஜபம் வீணேயாகும்' என்று விசுவஸார தந்திரம் தெரிவித்திருக்கிறது.

'நாள்தோறும் இத்தனை தடவைகள் ஜபம் செய்தே தீருவேன்' என்று விரதம் எடுத்துக் கொள்ளும் பக்தர்கள் பலர் உள்ளனர். அது போலவே இஷ்ட தெய்வத்தின் திருநாம ஜபத்தை ஒரு கோடி தடவைகளோ, நூறு கோடி தடவைகளோ குறிப்பிட்ட சில ஆண்டுகளில் உச்சரித்துத் தீருவது என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளும் பக்தர்களும் இருக்கிறார்கள். ஒரு கணக்குப்படி உச்சாரணம் செய்வது என்பது முக்கியமானாலும் கடவுளுக்காக அன்புணர்ச்சி ததும்ப அந்த ஜபத்தைச் செய்வதே மிக மிக முக்கியமானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ''இலட்சம் தடவைகள் ஜபம் செய்ய வேண்டும் என்ற உறுதியை மேற்கொள்வதுடன், இலட்சியத்தை(அதாவது இறைவனை)யும் மறந்து விடாமல் ஜபிக்க வேண்டும் என்பதும் முற்றிலும் அவசியமாகும்'' என்று வைணவப் பெரியார் ஒருவர் உபதேசித்திருக்கிறார்.

'ஜபக் கிரியை முறைப்படி ஆற்றப்பட வேண்டும்' என்பது தந்திர சாஸ்திரங்களின் உறுதியான கொள்கையாகும். 'கைவிரல்களின் மூட்டுகளைக் கொண்டோ, ஒரு ஜப மாலையின் உதவியாலோ ஜபத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்ளலாம்' என்று குலார்ணவ தந்திரம் கூறும். ஜபம் செய்வது சம்பந்தமாகப் பல்வேறு விதிகள் உள்ளன. ஜபமாலையை எவ்விதம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றியும் பல விதிகள்

இயற்றப்பட்டுள்ளன. ருத்திராக்ஷ மாலையும் துளசி மாலையும் இந்துக்களிடையே பழக்கத்தில் இருந்து வருகின்றன. இந்தியாவிலும், வேறு பல நாடுகளிலும் வேறு வகையான மாலைகளும் உபயோகிக்கப்படுகின்றன.

ஜபம் மூன்று வகைப்படும்: சரியான உச்சரிப்புடன் உரக்க ஜபிப்பது 'வாசிக ஜபம்' எனப்படும். இறைவனிடம் உள்ளத்தை நிறுத்தி, நாக்கையும் உதடுகளையும் மெல்ல அசைத்துத் தனக்கு மட்டுமே கேட்கும் வகையில் செய்யும் ஜபம் 'உபாம்சு ஜபம்' எனப்படும். ஜப வாசகத்தின் பொருளாக விளங்கும் இறைவனைச் சிந்தித்தபடியே மானசிகமாக உச்சரிக்கப்படும் ஜபம் 'மானஸ ஜபம்' ஆகும். மானஸ ஜபத்தை யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். இந்த மூன்று வகை ஜபங்களும் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்து மகத்தான சக்தியுடன் விளங்குகின்றன. வாசிக ஜபத்தின் சக்திக்கு இரண்டு என்று மதிப்புக் கொடுத்தால், உபாம்சு ஜபம் நான்கு என்ற மதிப்புப் பெறும்; மானஸ ஜபம் பதினாறு என்ற மதிப்பைப் பெறும்.*

* சுவாமி ஸ்வாஹானந்தர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையைத் தழுவி இந்த இதழின் விஜயதீபம் இடம் பெறுகிறது.

யாருடைய மனதையும் புண்படுத்தி விடாதபடி மரியாதையாகப் பேசு.
—சமண மதம்

குழந்தைகளின் இதயத்திலும் வாயிலும் வரும் கடவுளின் பெயர் தாய். —தாக்கரே

தர்ம காரியங்கள் செய்யும்போதுதான் ஒருவன் தெய்வ வழிபாடு செய்வதாகச் சொல்ல முடியும்.
—ஸவான ரோலா

நம்மிடத்தில் எங்கேயோ கோளாறு இருப்பதனால் நாம் கடவுளில் ஒன்றுபடாதிருக்கிறோம்.
—அருள் விருந்து (தர்ம சக்கரம்)

காமம், கோபம், லோபம், மோகம், மதம், வெறுப்பு ஆகிய துர்க்குணங்கள் கண்ணனின் நாமத்தை ஜபிப்பதனால் வேரோடு கிள்ளி எறியப்படுகின்றன.
—ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்

செய்யாமல் விட்டுள்ள ஒவ்வொரு கடமையும் புதிதாக ஏழு கடமைகளுடன் திரும்ப வரும்.
—சார்லஸ் இங்ஸ்லே

சூரிய உதயம், உச்சிப்போது, சாயரட்சை, மாலை, யாமம், வைகறை, ஆகிய ஆறு காலங்களிலும் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும். —வடலூர் வள்ளலார்

மனிதனின் பாவங்கள், அவனுடைய மன அவலங்களின் பயன். மனதைச் சிரைத்துப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளாதவர்கள், மயிரை மட்டும் ஏன் சிரைத்துக்கொள்ள வேண்டும்?
—கபீர்தாசர்

வெளிப் பார்வைக்குக் கேவலமாக உள்ளதும், ஆனால் உட்புறத்திலே அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசைதான் ஆண்டவன் குடியேறி வசிப்பதற்கு ஏற்றதொரு மாளிகை.
—இங்கர்சால்



முருகனின் லீலை

திருமுருக கிருபானந்தவாரியார்

'சோழ வளநாடு சோறுடைத்து' என்பது ஔவையார் வாக்கு. நெற்களஞ்சியமாக விளங்குவது சோழ மண்டலம். பொன்னி நதி பாய்ந்து நன்னிதிகள் ஓங்கி இறைவனுடைய சந்நிதிகள் பல விளங்கித் திகழ்வது சோழவள நாடு. 'சோறுடைத்து' என்ற சொல்லுக்கு அரிசிச் சோறு மிகுந்தது என்ற பொருளேயன்றி, மோட்சத்தைத் தரவல்ல நாடு என்ற மற்றொரு பொருளும் உண்டு. சோறு - மோட்சம்.

இத்தகைய சிறந்த சோழ நாட்டில் செங்காட்டங் கோட்டத் துறையூரில் பிறந்தவர் சிவகவி. இவர் இளமையில் தாய்தந்தையரை இழந்து, வறுமையில் உழன்று வயிரபுரம் என்ற ஊரில் ஒரு பள்ளியில் கலை பயின்று கொண்டிருந்தார். படிப்பில் இச் சிறுவர் மந்தமாக இருந்தபடியால் ஆசிரியர் தமக்குச் சொந்தமான பயிருக்குக் காவல் புரியச் சொன்னார்.

சிவகவி காவல் புரியும்போது வெயிலின் கொடுமையால் அருகில் இருந்த காளியம்மை கோயிலில் படுத்து உறங்கிவிட்டான். வயிரபுரத்தை ஆட்சி புரிந்த காளிங்கராயனுடைய குதிரை வந்து பயிரை மேய்ந்துவிட்டது.

கண்விழித்த சிவகவி பயிர் அழிந்ததை நோக்கினான். ஆசிரியரால் என் உயிர் அழியுமே என்று நடுங்கினான். ''பராசக்தீ! தேவீ! என் ஆவியை உன் திருவடியில் அர்ப்பணம் புரிகின்றேன்'' என்று தொழுது அழுது பராசக்தியின் பாதமலரில் தன் தலையை மோதலுற்றான். பண்டைத் தவத்தால் அம்பிகை அவன் முன் தோன்றினாள். ''பாலகனே! நீ வருந்தற்க'' என்று கூறி, அவனுடைய நாவில் திரிசூலத்தால் பிரணவ மந்திரத்தைப் பொறித்து மறைந்தாள். கலைஞானம் கைவரப் பெற்ற அம் மைந்தன் உடனே பாடல் பாடினான்:

''வாய்த்த வயிரபுர
மாகாளி யம்மையே
ஆய்த்த அருகாம் அணிவயலில்—
காய்த்த

கதிரைமா ளத்தின்ற
காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ.''

குதிரை கீழே வீழ்ந்து மாய்ந்தது.

இதனை அறிந்த ஆசிரியர் அஞ்சினார். ''சிறுவனே! நீ என்ன காரியம் செய்தாய்? இந்த நிலம் அரசன் தந்த மானியந்தானே? நீ அரசனுடைய பட்டத்துக் குதிரையைக் கொன்றுவிட்டனையே! அரசன் நம்மைத் தண்டிப்பானே! மானியத்தையும் பிடுங்கிக் கொள்ளுவானே!'' என்று கூறி வருந்தினார்.

சிவகவி, ''குருநாதா! நீர் வருந்தற்க. அரசன் வந்து சீறுவானாயின் குதிரை போன உலகுக்கு அவனையும் அனுப்பிவிடுவேன். 'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை உருண்டு வந்து குடிகள் வீட்டு அம்மிக் கல்லை உடைக்கும்' என்ற பழமொழிக்கிணங்க மன்னனுடைய குதிரை நமது பயிரை அழித்தது. நான் அதன் உயிரை அழித்தேன்'' என்றான்.

இதனை அறிந்த காளிங்கராயன் விரைந்து வந்து ஆசிரியரை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். உடனே சிவகவி முன் பாடிய பாடலை மாற்றிப் பாடினான்:

''வாய்த்த வயிரபுர
மாகாளி யம்மையே
ஆய்த்த அருகாம் அணிவயலில்—
காய்த்த

கதிரைமா ளத்தின்ற
காளிங்க ராயன்
குதிரை மீளக்கொண்டு வா.''

குதிரை பிழைத்தெழுந்தது. மன்னன் மகிழ்ந்து ஆசிரியருக்கும் சிவகவிக்கும் நிரம்பப் பரிசில்கள் வழங்கினுன்.

ஆசிரியர் சிவகவியை வாழ்த்திப் பொய்யாமொழி என்று பேர் சூட்டினுர்.

பொய்யாமொழிப் புலவர் அரசர்களால் மதிக்கப்பெற்றுச் சீரும் சிறப்பும் பேரும் புகழும் எய்திப் பெருமிதமாக வாழ்ந்தார். செல்வச் செழிப்புடன் திகழ்ந்தார்.

ஒரு முருகனடியார் பொய்யாமொழி யிடம் வந்து வணங்கி, ''தமிழ்க் கொற்றவரே! தங்கள் மலர்வாயால் முருகப் பெருமான்மீது கவி பாடுவீராக'' என்ருர்.

செல்வச் செருக்கும் கல்வி முறுக்கும் படைத்த பொய்யாமொழிப் புலவர், ''கோழியைப்பாடிய என் செந்தமிழ் நாவால் குஞ்சிணப் பாடமாட்டேன்'' என்ருர்.

இதனைக் கேட்ட முருகனடியார் மிகவும் வருந்தினுர். ''முருகா! என்னே இவருடைய செருக்கு? கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடுகிலேன் என்ருரே! ஆண்டவனே! சங்கரனே சண்முகன் என்ற உண்மையை இவர் உணர்ந்திலரே! மற்றவர்கள் தவறு செய்யலாம்; கற்றவர் தவறு செய்யக் கூடாதே''என்று முருகனிடம் முறையிட்டார்.

ஆறுமுகப் பெருமான், ''அன்பனே! பொய்யாமொழியை நாம் தடுத்தாட்கொள்ளு வோம்'' என்று அசரீரியாகக் கூறினுர்.

மருகனை வெறுக்கின்றவனை மாமியார் வெறுத்து விலகுவாள். முருகனைப் பாட மறுத்ததால் பொய்யாமொழியை விட்டு முருகனுடைய மாமியாராகிய மகாலட்சுமி விலகிவிட்டாள். வறுமையாகிய சிறுமை எய்தியது. வாடினுர். பொருள் படைத்தவரை நாடினுர். திருவுடையாரைத் தேடினுர்.

பொய்யாமொழிப் புலவர் புறப்பட்டார். பாண்டி நாட்டிலுள்ள காளையார் கோவிலுக்குச் சென்ருர். அங்கே கோயில் திருவிழா நிகழ்ந்து கொண்டிருந்தது. கூத்தாள் என்ற இளம்பெண் நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். அவளும், அவளுடைய அக்காளும், அவர்களின் தாயும், தாய்க்குத் தாயும் குருடிகளாக இருந்தார்கள். இதைக் கண்டு இரக்கம் எய்திய பொய்யாமொழி ஒரு பாடல் பாடினுர். நால்வரும் கண் பெற்றுக் களிப்புற்ருர்கள்.

பொய்யாமொழிப் புலவர் தமிழ்ச் சங்கத்தை நிறுவும்பொருட்டு மதுரை சென்ருர். அரசனுகிய வணங்காமுடிப் பாண்டியன் ஆலவாயண்ணலின் ஆலயத்தில் வீழ்ந்து வணங்கிக்கொண்டிருக்கின்ற காட்சியைக் கண்டு அடியில் வரும் அரிய கட்டளைக் கலித்துறையைப் பாடினுர் :

''குழற்கால் அரவிந்தங் கூம்பக்
குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதியம்அன் ருேநின்
திருக்குலம்; நீஅவன்றன்
அழற்கால் அவிர்சடை மீதிருப்
பாய்அந்த அந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோ?வணங்
காமுடிக் காவலனே.''

''வணங்காமுடிப் பாண்டியனே! நின் குலமுதல்வனுகிய சந்திரன் சிவபெருமானுடைய சடைமுடியில் இருக்கின்ருன். நீ அப் பெருமானுடைய திருவடியில் வணங்குகின்றனையே? இது முறையா?'' என்ற பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

பாண்டியன் பொய்யாமொழியைப் பணிந்தான். பொய்யாமொழி, ''நான் சங்கத்தை நிறுவ வந்துள்ளேன்'' என்ருர். பாண்டியன், 'இவர் சங்கப் புலவருக்குச் சமானமானவரா?' என்று ஐயுற்ருன்.

''உங்களிலே யானெருவன்
ஒவ்வேனே? ஒவ்வுவனே?
திங்கட் குலனறியச்
செப்புங்கள் — சங்கத்தீர்
பாடுகின்ற பாடலுக்கென்
பன்னூலும் ஒக்குமோ?
ஏடெழுதார் ஏழெழுவீர் இன்று''

என்ற பாடலைப் புலவர்பெருமான் பாடினுர். சங்கப் புலவருடைய கற்சிலைகள் கரக்கம்பம் சிரக்கம்பஞ் செய்தன.

பொற்றாமரைக் குளத்திடம் சென்றபோது அடியில் வரும் பாடலைப் பாடினார். சங்கப் பலகை மிதந்தது.

“பூவேந்தர் முன்போல்
புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும்
பான்மையினால்—மாவேந்தன்
மாறன் அறிய
மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.”

பாண்டியன் அவருடைய பெருமையை அறிந்து விடுதி தந்து உபசரித்தான். அரச காரியங்களின் மிகுதியால் பாண்டியன் சங்கம் நிறுவுவதில் கவனம் செலுத்தினான் இல்லை.

பொய்யாமொழி மனம் நொந்து சினத்தால் வெந்து மதுரையை விட்டுப் பல்லக்கில் புறப்பட்டார். இதனை அறிந்த பாண்டிமா தேவி மதி கலங்கினாள். புலவர் வெகுண்டால் பாண்டி நாட்டுக்கும் பாண்டியனுக்கும் கேடு வரும் என்று அஞ்சினாள். ஆண் வடிவில் சென்று புலவருடைய பல்லக்கைச் சுமந்தாள்.

இதனைத் தமது அறிவுக் கண்ணால் அறிந்த புலவர், பல்லக்கை விட்டு இறங்கி, அம்மையாரைக் கருணைக் கண்களால் கண்டு ஆசி கூறி ஒரு நேரிசை வெண்பாவால் பாராட்டி அருள்புரிந்தார்.

பாண்டியன் புலவரைப் பணிந்து உபசரித்தான். நான்காவது சங்கம் நிறுவினான். புலவருக்குப் பொன்முடிப்பு வழங்கினான்.

புலவர் பாண்டியனுடைய அமைச்சன் தஞ்சைவாணன்மீது நானூறு பாடல்களால் அமைந்த கோவை பாடினார். ‘தஞ்சைவாணன் கோவை’ என்ற அந் நூல் மிகவும் சொற்சுவையும் பொருட் சுவையும் பொருந்தியது. இதனைக் கேட்ட அமைச்சன் நானூறு தேங்காய் அளவுள்ள பொற்கட்டிகளை வழங்கினான்.

இந்தப் பொருட்செல்வத்துடன் புலவர் தமது ஊர் நாடிப் புறப்பட்டார். வழியில் காளையார்கோவில் எதிர்ப்பட்டது. இரவில் தமக்கு உரிய பொருளுடன் தங்கும்பொருட்டு, தம்மால் கண்பெற்ற கூத்தாளின் இல்லத்தில் சென்று கதவைத் தட்டினார். அவள் செல்வச் செருக்கால் கதவைத் திறந்தாளில்லை. “பழைய குருடி, கதவைத் திறவடி” என்றவுடனே கூத்தாள் கண் இழந்தாள். தான் செய்த குற்றத்தை நினைந்து வருந்தினாள். புலவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். புலவர் கருணை புரிந்தார். கண் பெற்று அவரை வணங்கி உபசரித்தாள்.

அந்த ஊரிலுள்ள கணிகையர் எழுபதின்மர் ஆளுக்கு ஆயிரம் பொன் தந்து புலவரை வணங்கினார்கள்.

இத்தனை செல்வத்துடன் புலவர் புறப்பட்டார். தங்கத்தை நெருப்பில் காய்ச்சிச் சூடேற்றித் தண்ணீரில் தோய்த்துக் குளிர வைத்துச் சுத்தியால் அடித்து அணிகலன்கள் செய்வார்கள். அதுபோல் முருகவேள் புலவருக்கு வறுமை தந்து வெதும்ப வைத்துச் செல்வம் தந்து குளிர வைத்தார். இப்போது அவரைத் தடுத்தாட்கொள்ள ஏற்ற தருணம் என்று திருவுளம் பற்றினார்.

பொய்யாமொழிப் புலவர் செல்வப் பெருக்கத்துடன் போகும் வழியில் பாலைவனம் குறுக்கிட்டது. அங்கே கரிய பெரிய வேடன் வில்லும் அம்புமாகப் புலவரை வழிமறித்தான்.

“ஏய்! நில்.”

பொய்யாமொழி நடுநடுங்கிவிட்டார். மடியில் கனமுடையானுக்கு வழியில் பயம் என்னுமாப் போல், நிரம்பிய செல்வத்துடன் வரும் அவர் அஞ்சினார். ‘அந்தோ! பொருளைப் பறிகொடுத்தாலும் குற்றம் இல்லை. என் உயிருக்கும் இடர் வந்துவிட்டதே!’ என்று எண்ணி நிலைகலங்கினார்.

வேடன், “நீ யார்?” என்று வினவினான்.

“நான் பொய்யாமொழிப் புலவன்.”

“ஓ! பொய் ஆம் மொழிப் புலவனா? உனக்குக் கவிபாடத் தெரியுமா?’

“ஆம், தெரியும்.”

“நல்லது. இந்தப் பாலைவனத்தைச் சிறப்பித்து என் பேரையும் அமைத்து

நற்ருய் இரங்கல் என்ற துறையில் ஒரு கவி பாடு.''

பொய்யாமொழிப் புலவருக்குச் சிறிது அச்சம் அகன்றது. 'இவன் நம் உயிரை வாங்க மாட்டான்; கவி கேட்கின்ருன். தமிழ்ப் பிரியன் போலும்' என்று எண்ணினர்.

''அப்பா! உன் பேர் என்ன?''

''என் பேர் முட்டை.''

உடனே புலவர் பாடினர்:

''பொன்போலும் கள்ளிப்
பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற்
கிசைந்தனளே — மின்போலும்
மானவேல் முட்டைக்கு
மாருய தெவ்வர்போம்
கானவேல் முள்தைக்குங் காடு.''

இப் பாடலைக் கேட்ட வேடன் புன்னகை புரிந்தான்.

''பேஷ்! பாடல் சொற்சுவையுடன் திகழ்கின்றது. ஆனல் பொருட்சுவை இல்லை. முதல் அடியில் பாலுடன் கூடிய கள்ளிச் செடி பற்றி எரிகின்ற கானகம் என்று வருகின்றது. கடைசி அடியில், 'கானவேல் முள் தைக்கும் காடு' என்று வருகின்றது. கள்ளிச் செடி எரியும் காட்டில் ஈரமில்லாத வேல முள் எரியாமல் காலில் தைக்குமா? முன்னுக்குப் பின் முரண். உன் பேரை வைத்து நான் பாடுகின்றேன்'' என்று பாடினன்:

''விழுந்ததுளி அந்தரத்தே
வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென்
றேங்கிச் — செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில்
பெய்வளையும் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.''

இதைக் கேட்ட புலவர் துணுக்குற்ருர். 'இப்படி அழகிய கவி பாடுகின்ற வேடனும் உளனே?' என்று எண்ணி உற்றுப் பார்த்தார்.

வேடன் வேலனைக் காட்சியளித்தான். வில் வேலாக மாறியது. நூறு கோடி சந்திர ஒளியுடன் காட்சியளித்த கந்தக் கடவுளின் திருவடியில் வீழ்ந்து புலவர் பல முறை பணிந்தார். வினை தணிந்தார். 'முருகா! முருகா!' என்று துதி செய்தார்.

''அன்பனே! நம் அடியான் உன்னிடம் வந்து நம்மீது கவிபாடச் சொன்னல், சேவலைப் பாடிய செந்தமிழ் நாவால் குஞ்சைப் பாடமாட்டேன் என்றனையே! பாண்டியனையும் அமைச்சனையும் கானப் பேர்க் கணிகையரையும் பாடினுய். இப் போது முட்டை என்று பாடினுயே? கோழிக்கும் குஞ்சுக்கும் முட்டை பெரிதோ?'' என்று கூறிப் புன்னகை புரிந்தார் முருகர்.

புலவர், ''கருணைக் கடலே! அடியேனுடைய அறியாமையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறி வணங்கினர்.

''பொய்யாமொழியே! சிவமூர்த்திக்கும் நமக்கும் பேதம் இல்லை. சங்கரனே சண்முகன். சிவமூர்த்தியின் பழைய வடிவு ஆறுமுக வடிவு. நம்மைப் பாடாதவன் நலிவு பெறுவான்'' என்று அருள்புரிந்து மறைந்தருளினர்.

பொய்யாமொழி தெளிவு பெற்ருர். முருகப்பெருமானை வழிபாடு செய்தார்.

இந்த வரலாற்றைச் சுருங்கிய சொற்களால் அருணகிரிநாதர் கூறுகின்ருர்:

''முற்றத்திரி வெற்றிக்குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப் பெயர் செப்பிக்கவிபெறு
பெருமாளே!''

வேலை என்பது உங்கள் திறமை எத்தமையது என்பதைக் காட்டும் ஒரு வாய்ப்பே தவிர வேறல்ல.
—நெப்போலியன்

சிறுவர் பகுதி :



ஒரு கிராமத்தான்

— நாடோடி—

ஒரு சமயம் காசி விசுவனுதர் கோவிலில் வெகு விலையுயர்ந்த ஒரு தங்கத் தாம்பாளம் காணப்பட்டது. அதில், ''உலகில் என்னிடம் யார் மிகப் பிரியமான வர்களோ, அவர்களுக்கு இது காசி விசுவநாதராகிய என்னுடைய பரிசு. இந்தத் தாம்பாளம் அந்த ஆளிடம் தானுகவே போய்ச் சேரும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

அன்று சிவராத்திரி தினம். பெரிய வித்துவான்கள், பண்டிதர்கள் எல்லாரும் கோவிலில் இருந்தனர். அந்தச் சமயம் ஒரு கிராமத்தான், ''இன்று சிவராத்திரியாக இருப்பதால் கங்கையில் ஸ்நானம் செய்து காசி விசுவநாதர் தலையில் வில்வங்களைப் போட்டுவிட்டுப் போவோம்'' என்று கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுக் கோவிலுக்குள் நுழையப் போனுன்.

கோவிலுக்கு வெளியே ஒரு குஷ்டரோகி படுத்துக்கொண்டு அழுதுகொண் டிருந்தான். அவன் உடலில் புண்கள் அழுகிச் சொட்டின. கோவிலுக்குள் சென்ற எல்லாரும் நாற்றம் தாங்காமல் மேல்துணியால் தங்கள் முகத்தை மூடிக்கொண்டு சென்றுர்கள்.

ஆனுல் கிராமத்தானே ஒரு காலைக் கோவிலுக்குள்ளே வைத்தவன், குஷ்டரோகியைக் கண்டதும், அந்தக் காலை எடுத்து வெளியே வைத்தான். குஷ்டரோகியைக் கட்டிக்கொண்டு, ''அப்பா, அழாதே. உன் கஷ்டம் வெகு நாள் இருக்காது. நான் போய், சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்து, உன்னை என் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுன். உள்ளே சென்றதும், அந்த விலையுயர்ந்த தாம்பாளம் அவன் கைக்கு வந்து சேர்ந்தது. ''இவன்தான் மனிதன்'' என்ற குரல் ஆகாயத்திலிருந்து எழுந்தது.

* * *

குரு நானக்

சீக்கிய குரு நானக் தேவ் யாத்திரை செய்துகொண்டிருந்த காலத்தில் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். இவர் தங்கிய அன்று அவ்வூர்க் கருமான் ஒருவன் சோள்மாவினுல் செய்த தடியான இரு ரொட்டிகளை அவருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து கொடுத்தான். அதே சமயம் அவ்வூர் ஜமீன்தாரும் அறுசுவை உண்டி தயார்செய்து எடுத்துக்கொண்டு குருதேவரைப் பார்க்க வந்தார்.

குரு நானக் ஜமீன்தார் கொண்டு வந்த அறுசுவை உண்டி பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல், கருமான் கொண்டு வந்த சோள ரொட்டியை ஆனந்தமாகச் சாப்பிட்டுத் தண்ணீரும் அருந்தினர்.

கொண்டு வந்த ஆகாரத்தைக் குருதேவர் அலட்சியம் பண்ணியதால் ஜமீன் தாருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவர் குருதேவரைக் காரணம் கேட்டார். குருதேவர் தாம் உண்டு மிச்சமிருந்த கருமானின் ரொட்டித் துண்டை ஒரு கையிலும், ஜமீன்தார் கொண்டுவந்த ஆகாரத்தில் சிறிதை மற்ரெரு கையிலும் எடுத்துக்கொண்டு, பகவானைப் பிரார்த்தனை பண்ணிவிட்டு இரண்டையும் கீழே தரையில் போட்டார்.

கருமானின் ரொட்டித் துண்டில் பால் துளிகள் பொங்கி வந்தன. ஜமீன்தாரின் அன்னத்தில் ரத்தம் துளிர்த்தது.

திடுக்கிட்ட ஜமீன்தார், "என்ன காரணம்?" என்று குருதேவரைக் கேட்டார்.

"கருமான் தன் சரீர உழைப்பால் சம்பாதித்து மனப்பூர்வமாகக் கொடுத் துள்ள அந்த அன்னம் தூய்மையானது, சாத்துவிகமானது. அதைச் சாப்பிடு வதால் உள்ளத்தில் தூய்மை உண்டாகும். நீ கொண்டு வந்துள்ள அன்னம் பிறரை அதிகாரபூர்வமாகக் கசக்கிப் பிழிந்து ரத்தத்தினுல் செய்ததற்குச் சமானம். ஆகவே அது ரத்தத்தினுல் செய்த அன்னம். அதைச் சாப்பிடுவதால் உள்ளத்தில் துர் எண்ணங்கள் உண்டாகும்" என்று குரு நானக் பதில் சொன்னுர்.

* * *

ஒரு முஸ்லிம் சாது

கையாங் என்கிற முஸ்லிம் சாது தம் சிஷ்யனேடு காட்டு வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது 'நமாஸ்' படிக்கும் சமயம் வரவே, கீழே துணியை விரித்துப் போட்டு இருவரும் நமாஸ் படிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது திடீரென்று சிங்கத்தின் கர்ஜனை கேட்கவே, சிஷ்யன் பயந்து ஓடிப் போய்ப் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டான். அப்பொழுதும் அவன் பயம் நீங்கவில்லை. ஆனுல் குருவோ நமாஸ் படிப்பதை நிறுத்தாமல் கடவுள் வழிபாட்டிலேயே மூழ்கி இருந்தார். பக்கத்தில் வந்து நின்ற சிங்கத்தைக் கூட அவர் கவனிக்கவில்லை. சிங்கம் அவரை ஒன்றும் செய்யாமல் அப்பால் சென்று விட்டது.

சிங்கம் சென்றதும், சிஷ்யன் கீழே இறங்கி வர, இருவரும் காட்டை விட்டு நாட்டுக்கு வந்தார்கள். அப்பொழுது ஒரு கொசு குருவின் மூக்கைக் கடிக்க, அவர் 'ஹா'வென்று கூச்சல் போட்டு அலறினர். அதைக் கண்ட சிஷ்யன், குருவைப் பார்த்து, "சிங்கத்தைக்கூடத் திரும்பிப் பாராதவர், இப்படி ஒரு சின்னக் கொசுவைப் பார்த்து இத்தனை கூச்சல் போடுகிறீரே" என்று கேட்டான்.

அதற்குக் கையாங், "நான் அப்பொழுது கடவுளோடு சேர்ந்து இருந்தேன். இப்பொழுதோ மனிதனேடு சேர்ந்து இருக்கிறேன்" என்ருர்.

சுவாமி சிவானந்தரின் போதனைகள்

தன்னலமற்ற பணி புரிவதனுல் மட்டுமே சித்தசுத்தி ஏற்படுகிறது. இவ்விதம் உள்ளம் பரிசுத்தமாகும்போது மிகச் சிறிய ஒரு தூண்டுதலும்கூட இதயத்தில் கடவுள் பக்தியை நிரப்பும். உள்ளம் பரிசுத்தமாகாத நிலையில் எவ்வளவுதான் ஜபம் செய்தாலும் ஆன்மிகத் துறையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது. மனதில் சுயநலம், பொருமை, பகையுணர்ச்சி ஆகியவை நிறைந்திருந்தால் ஜபம் எப்படி நல்ல பயனைத் தர முடியும்? நாடு முழுவதும் தமோகுணத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஆகவேதான் நாடு முன்னேறுவதற்காக சுவாமிஜி (விவேகானந்தர்) கர்மத்தை ஒரு வழியாக விதித்திருக்கிருர். தேசபக்தியைப் பற்றி நாம் பிரமாதமாகப் பேசுகிருேம். ஏழைகளிடம் முன்பு பாராட்டுவது, அவர்களுக்குத் தொண்டு செய்வது ஆகிய இவற்றைவிடச் சிறந்த ஒரு தேசபக்தி உண்டா?

நல்ல செயல்களில் ஈடுபடுவதோடுகூட ஒழுங்குமுறை தவருமல் தியானமும் ஜபமும் பழகி வர வேண்டும். இவ்விதம் செய்பவனுக்கு வாழ்க்கையில் எந்தவிதத் தொந்தரவும் ஏற்படாது. நாம் வேலை செய்துதான் ஆகவேண்டும், அதில் எந்த விதச் சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆனல் கர்மம் செய்வதுடன்கூட ஜபமும் தியானமும் பழகாமற் போவோமானுல், நம்மால் சரியான மனப்பான்மையுடன் கர்மம் செய்வது இயலாமற் போய்விடும். 'நான்', 'எனது' என்பன போன்ற எண்ணங்கள்தாம் நம்மைக் கெடுக்கின்றன. அத்தகைய எண்ணங்களைக் கொண்டவன் தன் சுக வசதியை நாடுபவனுகவே எப்போதும் இருப்பான். ஜபம், தியானம் ஆகியவற்றைப் பழகி வருவது முற்றிலும் அவசியம். அவற்றிலிருந்து சிறிதுகூட நழுவுதல் என்பது கூடவே கூடாது. தியானம் செய்யும்போது நீயும் கடவுளும் மட்டுமே இருப்பதாக நினைக்க வேண்டும்; அந்தச் சமயத்தில் வேலைகள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்-மடம் ஆகிய எல்லாவற்றையும்கூட முற்றிலும் நீ மறந்துவிட வேண்டும்.* படிப்படியாக, 'நீ வாழ்கிருய்' என்ற எண்ணத்தையும்கூட மறந்துவிட வேண்டும். எந்தச் செயல் உன் உள்ளத்தை மாசுபடுத்துகிறதோ அது சத்கர்மமாகாது; தீய செயலே ஆகும்.

யாருக்குத் தொண்டு செய்கிருேமோ அவரிடம் இறைவனைக் காணும்போதுதான், நாம் செய்யும் தொண்டு சரியான முறையில் அமைவது சாத்தியமாகும். ஆனல் ஆரம்பத்திலேயே இப்படிப்பட்ட மன நிலையைப் பெறுவது கடினம். ஆதலால் குருவின் வாக்கியத்தில் முதலில் நம்பிக்கை வைத்து அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் சுவாமிஜியிடம் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஸ்ரீகுருதேவரின் வாழ்க்கை, சூத்திரம் போன்றது. சுவாமிஜியின் வாழ்க்கையோ அந்தச் சூத்திரத்திற்கு விளக்கவுரை போன்றது. ஸ்ரீகுருதேவரின் வாழ்க்கையில் நடைபெற்ற பலவேறு நிகழ்ச்சிகளின் அடிப்படையில், அனைவரையும் பகவானுகக் கண்டு தொண்டு செய்வது என்னும் இந்த உயர்ந்த இலட்சியத்தை சுவாமிஜி வகுத்தார்.

ஸுஷும்ன நாடியில் உள்ள சக்கரங்களின்மீது தியானம் செய்ய வேண்டும். இதயத்தில் பன்னிரு இதழ் கொண்ட செந்தாமரை மலரில் இஷ்டதெய்வம் வீற்றிருப்பதாகத் தியானிக்க வேண்டும். சிரசில் ஆயிரம் இதழ் கொண்ட வெண் தாமரை மலரில் குரு வீற்றிருப்பதாகத் தியானிக்க வேண்டும். இந்த வகையில் தியானம் செய்வது ஜபத்திற்கு உதவியாக இருக்கும்.


---

* இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவி ஒருவருக்கு, சுவாமி சிவானந்தர் அருளிய உபதேசங்களிலிருந்து ஒரு பகுதி இங்கே தரப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்தத் தியானங்களைப் பழகுவது அவசியம்.

தவம், யாகம், தானம், சாஸ்திரங்களைப் படிப்பது ஆகியவற்றின் மூலம் கடவுளை நேரில் காண முடியாது. யார் மீது இறைவனின் திருவருள் பொழிகிறதோ அவரே இறைவனைத் தரிசிப்பார். என்றாலும் அத்துடன் உபநிஷதம் சொல்வதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்: 'பலவீன ரால் இந்த ஆத்மா அடையப்படுவதில்லை' என்று உபநிஷதம் முழங்குகிறது. எவரிடம் வலிமை இல்லையோ, முயற்சி இல்லையோ அவரால் இறைவனைத் தரிசிக்க முடியாது. பகவத்கீதை சுயமுயற்சியைப் பெரிதும் வலியுறுத்துகிறது. ''ஆத்மாவைக் கொண்டு ஆத்மாவை மேம்படச் செய்ய வேண்டும். ஆத்மாவே ஆத்மாவுக்கு நண்பன். ஆத்மாவே ஆத்மாவுக்குப் பகை'' என்பது கீதைவாக்கு. தன்னைத் தானே ஒருவன் பந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் ஒருவன் சோர்வுடனும் மனத் தளர்ச்சியுடனும் இருத்தல் கூடாது. இங்கு ஆத்மா என்ற சொல் மனம், புத்தி ஆகியவற்றைக் குறிக்கும்.

மனத் தளர்ச்சிக்கு உட்பட்டுவிடக் கூடாது. அது மனதின் அமைதியைக் குலைத்துவிடும். 'நாம் எல்லோருமே பாக்கியவான்கள், நாம் பகவானின் குழந்தைகள்' என்று எப்போதும் நினைக்க வேண்டும். தீய சிந்தனைகள் உள்ளத்தில் எழுமானால் அவற்றைப் பொருட்படுத்தவே வேண்டாம். மனதில் பூர்வஜன்ம சம்ஸ்காரங்கள் இருக்கின்றன. இடையிடையே அவை உணர்வு நிலைக்கு எழுகின்றன. நாம் வலிமையுடன் இருக்க வேண்டும். அச்சத்திற்கு இடமே இல்லை. நாளடைவில் எல்லாவித ஆன்மிக முன்னேற்றங்களும் நமக்கு வந்து சேரும்.



குருர் தேவோ மஹேச்வர:

வரகூர் ஸ்ரீ வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்

வடமொழியில் ஆசானைக் குறிக்கும் சொற்கள் பல உள்ளன. அவற்றுள், அத்யாபகன், உபாத்யாயன், ஆசார்யன், குரு என்பன மிகவும் பிரசித்தமானவை. இவற்றுள் ஒவ்வொன்றும், ஆசானிடமுள்ள ஒவ்வொரு தன்மையைக் குறிக்கிறது.

* * *

அத்யாபக:

அத்தியயனம் செய்விப்பவர் 'அத்யாபகர்' எனப்படுவார். வேத மந்திரங்களை முதலில் ஒருவர் எடுத்துக் கூற, மற்றவர் அவற்றை அப்படியே திருப்பிக் கூறுவது அத்தியயனம் ஆகும். ஆகவே மற்றவர் வேதங்களை அப்படியே திருப்பிக் கூறுமாறு முதலில் அவற்றை எவர் எடுத்துக் கூறுகிறாரோ அவர் அத்யாபகர், அதாவது அத்தியயனம் செய்விப்பவர் என்று முன்பு வழக்கில் இருந்திருக்கிறது. பிற்காலத்தில், தாம் கற்றதைக் கற்றபடியே பிறருக்கு எடுத்து அறிவிப்பவர்களும் அத்யாபகர் என்று வழங்கப்பெறுகிறார்கள்.

உபாத்யாய:

வேதாத்யயனம் என்பது பொதுவாக உபநயனம் என்ற ஒரு ஸம்ஸ்காரத்தைப் பெற்ற ஒருவனாலேயே செய்யத்தக்கது. ஒருவனுக்கு உபநயனம் என்ற ஸம்ஸ்காரம் அவனது தகப்பனாலோ அல்லது அவனது ஆசானாலோ செய்விக்கப்பட வேண்டும் என்பது நியதி. தன் தகப்பனாலேயே

உபநயனம் செய்விக்கப்பெற்ற ஒருவனுக்கு வேதத்தை மட்டும் கற்பிப்பவர் அத்யாபகர் எனப்படுகிருர். அந்த உபநயனம் என்ற ஸம்ஸ்காரத்தையும் தாமே செய்வித்து, வேதங்களையும் வேதாங்கங்களையும் உபநிஷதங்களையும் எவர் கற்பிக்கிருரோ அவரே உபாத்யாயர் எனப்படுவார்.

உபநீய து ய: சிஷ்யம்
வேதமத்யாபயேத் த்விஜ: |
ஸாங்கம் ஸஹரஹஸ்யம் தம்
உபாத்யாயம் ப்ரசக்ஷதே ||

என்பது முதியோர் வாக்காகும்.

ஆசார்ய:

வேதங்கள், வேதாங்கங்கள், உபநிஷதங்கள், மற்றுமுள்ள சாஸ்திரங்கள் யாவற்றையும் அவற்றின் பொருள்களோடு எவர் முதலில் தாம் ஆராய்ந்து அறிகிருரோ, பின்னர் அவற்றைப் பிறருக்குப் போதித்து அவர்களை அந்த வழியில் நடக்கச் செய்து அதிலே நிலைக்கச் செய்கிருரோ, அதுமட்டுமின்றித் தாமும் அந்த வழியிலேயே நடந்து அதிலேயே நிலைத்திருக்கிருரோ அவரே ஆசார்யன் எனப்படுகிருர்.

ஆப்நோதி ஹி சாஸ்த்ரார்த்தாந்
ஆசாரே ஸ்தாபயத்யபி |
ஸ்வயம் ஆசரதே யச்ச
தமாசார்யம் ப்ரசக்ஷதே ||

என்பதும் முதியோர் வாக்காகும்.

முதல் இருவரைக்காட்டிலும் இவருக்குப் பொருளறிவும், அதைப் பிறருக்கு ஊட்டி அதன்படி அவர்களை நடக்கச் செய்வதும், தாமும் அதன்படியே நடந்து காட்டுவதும் இயல்பாக இருக்கும் தன்மை, ஆசார்யன் என்னும் சொல்லால் சுட்டிக் காட்டப்படுகிறது. இக்காரணம் பற்றியே, 'வேதமநூச்ய ஆசார்யோ அந்தேவாஸிநம் அநுசாஸ்தி' என்னும் தைத்திரீய உபநிஷத வாக்கியத்தில், 'ஆசார்ய:' என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் ஆன்மாவைப் பற்றிய உண்மையான அறிவை அனுபூதியின் மூலம் பெற்றிருக்க வேண்டிய தேவையில்லை. அறியாமையில் மிக மிக ஆழ்ந்து, இறைவனின் திருவருளால் மனிதப்பிறவி அடைந்திருந்தும் மாக்களுக்கொப்பாக, செய்யத் தக்கவை எவை, செய்யத் தகாதவை எவை என்பதையே அறியாமல் மனம் போன போக்கிலேயே போய்க்கொண்டிருப்பவர்களை நல்வழிப்படுத்த ஓரளவு அறிவைப் புகட்டி, அந்த வழியிலேயே அவர்களை நடக்கச் செய்வதே இவர்களின் கடமையாகும்.

நல்வழிகளை அறிவதே அரிது. அறிந்தாலும் அவற்றைப் பிறருக்கும் புகட்டி அவர்களையும் அந்த வழியில் நடக்கச் செய்வது அதனினும் அரிது. அவ்வாறு செய்வதினும் தாம் அவ் வழி நடப்பது அரிதினும் அரிது. ஆகவே நல்வழிகளைத் தாங்கள் அறிந்து, அவற்றைப் பிறருக்கு அறிவித்து, அந்த வழிகளிலேயே அவர்களை நடக்கச் செய்து, தாங்களும் அவ் வழிகளில் நடந்து வரும் தன்மைகளைப் பெற்ற அத்யாபகர், உபாத்யாயர், ஆசார்யர் ஆகிய இந்த மூவரும் மிக மிக மதிக்கத்தக்கவர்களே ஆவர்.



குரு:

என்ருலும், அனுபூதியில் ஆத்மஞானம் பெற்றில்லாத நிலையிலுள்ளவர்களுக்கே இவை அனைத்தும் தேவை. தன்னறிவைப் பெற்று, துக்கமயமான இந்த உலகத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதே மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதே வேதஸாரமான உபநிடதங்களின் உட்கருத்தாகும். இதற்கு உறுதுணைகளாகவே முன்பு கூறியவை அனைத்தும் அமைந்துள்ளன.

ஆத்மஞானம் பெறுவது என்பது எல்லோருக்கும் எளிதான ஒன்றல்ல. அதைப் பெறுவதற்கு முன்பு நாம் பெற வேண்டிய தன்மைகள் பல உண்டு. அவற்றுள் தலைசிறந்த ஆசானை நாம் பெறுவது என்பதும் ஒன்ருகும். ஈசனின் திருவருளைப் பெற்றவனே

அத்தகைய ஆசானைப் பெற முடியும். ஈசனே அத்தகைய ஆசானாக ஒருவனை வந்தடைகிறார். 'ஆரோக்கியத்தைச் சூரியனிடமிருந்தும், ஐசுவரியத்தை அக்கினியிடமிருந்தும், மோட்சத்தை ஜனார்த்தனனாகிய விஷ்ணுவிடமிருந்தும், நல்லறிவை (ஞானத்தை) மகேசனிடமிருந்தும் பெற வேண்டும்'* என்று ஆன்றோர் வாக்கும் தெரிவிக்கிறது.

நல்லறிவு என்பதே ஆத்மஞானம்தான். அந்த அறிவை ஞானகுருவாகிய மகேசனைத் தவிர வேறு எவராலும் பெற்றுத்தர முடியாது. ஆகவே அந்த மகேசனே சிறந்த ஆசானாக அவரவருக்கு அவ்வப்போது தோன்றுகிறார். அத்தகைய ஆசானே வடமொழியில் 'குரு' எனப்படுகிறார்.

குரு என்னும் பதத்தில் உள்ள 'கு' என்பது ஆன்மாவின் அறியாமையையும், 'ரு' என்பது அதை விலக்குபவரையும் குறிக்கின்றன என்பதை ஆன்றோர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்கள்.

குசப்தஸ்து அந்தகார: ஸ்யாத்,
ருசப்தஸ் தந்நிவர்த்தக: |
அந்தகார நிரோதித்வாத்
குருரித்யபிதீயதே ||

ஒரே பரம்பொருள்தான் ஈசன் என்றும், குரு என்றும், ஆத்மா (ஜீவன்) என்றும் மூன்று விதமான தோற்றங்களில் உள்ளது என்பதை 'ஈச்வரோ குருராத்மேதி மூர்த்தித்ரயவிபாகிநே' என்பதன் மூலம் ஆன்றோர் தெரிவித்துள்ளனர்.

பிரமனாகவும், விஷ்ணுவாகவும், மகேச்வரனாகவும், இம் மூவராகவும் தோற்றமளிக்கும் ஸச்சிதானந்த லக்ஷணமாகிய பரப்பிரம்மமாகவும் குரு ஒருவரே தோன்றுகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.


குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர்
குருர் தேவோ மஹேச்வர: |
குரு: ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||

இக் காரணம் பற்றியே, 'தத்விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவ அபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்' என்னும் முண்டக உபநிஷத வாக்கியம், ஆத்மஞானத்தைப் பெற விரும்பும் எவரும் பிரம்மநிஷ்டராகிய குருவையே அணுக வேண்டும் என்று கூறுகிறது. இங்கு உபநிஷதம் 'குருமேவ' எனக் கூறும் முறையில் அத்யாபகரையும் உபாத்யாயரையும் ஆசார்யரையும் விலக்குகிறது; இல்லாவிட்டால் இங்கு 'ஏவ' என்பது பொருந்தாது. இங்கு 'ப்ரஹ்மநிஷ்டம்' என்னும் பதம் 'குரு' என்னும் பதத்தின் உட்கருத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

பிரம்மத்தை அறிந்தவனே பிரம்மநிஷ்டன் ஆவான். 'ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி' என்கிறது தைத்திரீயம். ஆன்மா தான் உபநிஷதங்களில் பிரம்மம் என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஆத்மா ச ப்ரஹ்ம' என்பதும் ஸ்ரீஆதிசங்கரரின் வாக்காக அமைந்திருக்கிறது. ஆகவே ஆத்மஞானத்தைத் தானும் பெற்றுப் பிறரையும் பெறும்படி செய்பவரே குரு எனப்படுவார். அவரும் தேவனாகிய சாட்சாத் மகேச்வரரேயன்றி வேறு ஒருவருமில்லை.

ஆசானைக் குறிக்கும் வக்தா, உபதேஷ்டா, ஆதேஷ்டா, புரோகித: என்பன போன்ற ஏனைய பதங்களுக்கும் இவ்விதம் வேறுபட்ட பொருள்கள் உண்டு என்பதையும் நாம் அறிவது பயன் தரும்.

* ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்
ச்ரியமிச்சேத் ஹுதாசநாத் |
மோக்ஷம் ஜநார்தநாதிச்சேத்,
ஜ்ஞாநமிச்சேத் மஹேச்வராத் ||



கொலை செய்யாதவனும், பொய் பேசாதவனும், திருட்டுக்குணம் இல்லாதவனும், மதிக்கத்தக்க நற்குணங்களை வாய்க்கப் பெற்றவனும், நல்லவனும், அடக்கமுடையவனும், நடுநிலைமையுடையவனும், கிடைத்ததைப் பிறருக்குப் பங்கிட்டு உண்பவனும், குற்றம் அற்றவனும், கட்குடி இல்லாதவனும், காமவேட்கை இல்லாதவனும் எவனோ அவனே (அஷ்டாங்க யோகம் குறிப்பிடும்) இயமம் என்னும் பயிற்சியில் நின்றவன் ஆவான். —திருமூலர் (திருமந்திரம்)



ஆஞ்சனேயரின் இலங்கைப் பயணம்

சுவாமி ஆத்மானந்தர்

சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களையும் கடந்த நிலையில்தான் பரம்பொருளின் தரிசனத்தைப் பெற முடியும். இந்த உண்மையை மூன்று கதாபாத்திரங்களின் வாயிலாகத் துளசி ராமாயணம் விளக்குகிறது.

1

சீதையைத் தேடிச் செல்லும் ஆஞ்சனேயர் ஆகாய மார்க்கமாக இலங்கையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார். வழியில் அவரை ஓர் அரக்கி தடுத்து நிறுத்துகிறாள். "நான் பல காலமாக உணவின்றிப் பசியோடு இருக்கிறேன்; கடவுளின் அருளால் என் ஆகாரத்திற்காக நீ இங்கே அனுப்பப்பட்டிருக்கிறாய்; ஆகவே நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்" என்று அவள் அனுமனிடம் கூறுகிறாள்.

ஆஞ்சனேயர் அவளிடம் மிகவும் பணிவாக, "அன்னையே, நான் இப்போது இராம காரியமாக மிகவும் அவசரமாகச் சென்றுகொண்டிருக்கிறேன்; அந்தக் காரியத்தை முடித்த பிறகு தங்களிடம் கட்டாயம் வந்து சேருகிறேன்; தயவு செய்து இப்போது என்னைப் போக அனுமதியுங்கள்" என்று வேண்டுகிறார்.

அவளோ, "முடியாது. நான் மிகுந்த பசியுடன் இருப்பதால் நீ சொல்வது போல் என்னால் காத்திருக்க முடியாது" என்று சொல்லிக்கொண்டே தன் வாயைப் பெரிதாகத் திறந்துகொண்டு அனுமனை விழுங்க வருகிறாள்.

அப்போது அவளுக்கும் அனுமனுக்கும் ஒரு வேடிக்கைப் போட்டி நடைபெறுகிறது.

புத்திமானாகிய ஆஞ்சனேயர் அந்த அரக்கியின் வாய் கொள்ளாத வகையில் தமது உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டுவிட்டார். அதனைக் கண்ணுற்ற அரக்கி மிகவும் சாமர்த்தியத்துடன் தன் வாயை மேலும் பெரியதாக்கிக்கொண்டாள். ஆஞ்சனேயரும் சளைத்துவிடவில்லை. அவர் தமது உருவத்தைப் பின்னும் பெரியதாக்கினார். அதைக் கண்ட அரக்கி தன் வாயை மிகமிகப் பெரியதாக்கி அனுமனை அனாயாசமாக விழுங்க முனைந்தாள். ஆஞ்சனேயரோ கண் மூடித் திறக்கும் நேரத்திற்குள் தமது உருவத்தை மிகவும் சிறியதாக்கி அந்த அரக்கியின் வாயினுள் சென்று வெளியே வந்தார்.

பிறகு அவர் அரக்கியை நோக்கி, "தாயே! தங்கள் விருப்பப்படியே தங்கள் வாயினுள் ஆகாரமாகச் சென்று வந்துவிட்டேன். இனி நான் போகலாம் அல்லவா?" என்று கேட்டார்.

ஆஞ்சனேயர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அரக்கி வடிவம் நீங்கித் தன் சுய உருவத்துடன் நாகர்களின் அன்னையாகிய சுரஸா அனுமனின் முன்பு கைகூப்பி நின்றாள்.

அவள் மிகவும் மகிழ்ச்சியுடன் அனுமனை ஆசீர்வதித்து, "ஸ்ரீராமபிரானின் அருளால் உனக்கு நிச்சயம் வெற்றியே கிடைக்கும். இராம காரியமாகச் செல்லும் வாயுகுமாரனாகிய உன் வலிமையையும் திறமையையும் புத்திசாலித்தனத்தையும் அறிந்து வரத் தேவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள்" என்று கூறி அனுமனை வாழ்த்தியும் அனுப்பினாள்.

இவ்விதம் சுரஸாவால் ஆசீர்வதிக்கப் பெற்ற ஆஞ்சனேயர் ஆகாய மார்க்கமாக மீண்டும் தமது பிரயாணத்தைத் துவக்கினர்.

2

சிம்ஹிகா என்ற ராக்ஷசப் பிசாசு கடலில் வாழ்ந்து வந்தது. அது ஆகாரம் பெறும் விதமே விசித்திரமானது. நீர்மட்டத்திற்கு மேலே வந்து ஆகாரத்திற்காக அந்தப் பிசாசு காத்துக்கொண்டிருக்கும். அப்போது ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்லும் பறவைகளின் பிரதிபிம்பம் நீரில் பிரதிபலிப்பதைப் பார்த்துச் சட்டென்று அவற்றைப் பிடித்துக்கொள்ளும். அந்த நிலையில் அந்தப் பறவைகள் நகர முடியாமல் கீழே விழுந்துவிடும். அவற்றை உட்கொண்டு, சிம்ஹிகா என்ற ராக்ஷசப் பிசாசு ஜீவித்து வந்தது.

அன்றைய தினமும் சிம்ஹிகா வழக்கம் போலத் தண்ணீர் மட்டத்திற்கு வந்து ஆகாரத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தது. அப்போது ஆகாய மார்க்கமாகச் சென்ற அனுமனின் பிரதிபிம்பத்தைக் கண்டு சட்டென்று ஓடிப்பிடித்தது. பெரிய இரையாகத் தனக்குக் கிடைத்திருக்கிறது என்று அதற்கு ஒரே மகிழ்ச்சி.

திடீரென்று தமது பிரயாணம் தடைப் பட்டதைக் கண்ட ஆஞ்சனேயர் சுற்றும் முற்றும் பார்த்துப் பிறகு கீழே நோக்கினர். முன்பு ஒரு முறை சுக்கிரீவன் தம்மிடம் இந்தச் சிம்ஹிகாவைப் பற்றிச் சொல்லி எச்சரித்திருந்தது அவருடைய நினைவுக்கு வந்தது. உடனே, தீரராகிய அவர் கீழே வந்து, அந்த ராக்ஷசப் பிசாசின் இதயத்தைப் பிளந்து கொன்று போட்டுவிட்டுத் தாமதமின்றி மீண்டும் இலங்கையை நோக்கித் தமது பிரயாணத்தைத் துவக்கினர்.

3

இறுதியாக இலங்கையை அடைந்த ஆஞ்சனேயர், 'அன்னை சீதாபிராட்டி எங்கே இருப்பார்? எப்படி அவரைக் கண்டுபிடிப்பது? எப்படி இந்த நகரத்தின் உள்ளே சென்று அன்னையைத் தேடுவது?' என்று யோசிக்கலானர். மிகவும் அழகிய அந்த இலங்கா புரியை மிகுந்த விழிப்போடு காவல் புரிந்து கொண்டிருந்த அரக்கர்களின் கண்களில் படாமல், இரவு நேரத்தில் சிறிய உருவத்தை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைவது என்று முடிவு செய்தார்.

இரவு நெருங்கியது. நன்ருக இருட்டியது. ஆஞ்சனேயர் ஸ்ரீராமபிரானைத் தம் இதய பீடத்தில் எழுந்தருளச் செய்து தியானித்துப் பிரார்த்தித்தார். பிறகு சிறிய உருவத்தை எடுத்துக்கொண்டு, காவல் மிகுந்த இலங்கா புரியினுள் நுழைய ஆரம்பித்தார்.

திடீரென்று அவர் முன்னல் பூதாகார மான ஓர் அரக்கி எதிர்ப்பட்டு இடி போன்று முழங்கினள்: ''யாரடா நீ முட்டாள்? என் அனுமதி இல்லாமல் இந்த நகரத்தில் நுழையவா முயல்கிருய்! நான் யார் தெரியுமா? என் பெயர் இலங்கினி. இலங்கையைக் காவல் புரிபவள் நான்தான். இந்த இலங்கா புரிக்கே சதையும் இரத்தமுமாக இருப்பவளே நான்தான். நீ யார்? எங்கே வந்திருக்கிருய்?''

ஆஞ்சனேயர் தாம் சும்மா சுற்றிப் பார்க்க வந்ததாகக் கூறினர்.

இலங்கிணியின் கோபம் மேலும் அதிகமாயிற்று. அவள் அனுமனின் கூற்றை நம்ப மறுத்து, ''திருடனைப் போல இங்கே வருகிறவர்கள் எனக்கு ஆகாரம் ஆகிவிடுவார்கள்!'' என்று ஆவேசத்துடன் கத்திக்கொண்டே அனுமனை ஓங்கி அடித்தாள்.

அடிபட்ட அதிர்ச்சியிலிருந்து சில விநாடிகளில் தம்மை விடுவித்துக்கொண்டு ஆஞ்சனேயர் தம் முஷ்டியால் அவள் கன்னத்தில் பலமாகப் பதிலடி கொடுத்தார். வாயு குமாரனின் அந்த அடியை இலங்கிணியால் தாங்க முடியவில்லை. அவள் தட்டுத் தடுமாறிக் கொண்டே இரத்தத்தைக் கக்கிய வண்ணம் கீழே விழுந்தாள். பெண் என்பதால் அவள் கீழே விழுந்து கிடந்த அந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக ஆஞ்சனேயர் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு இலங்கிணி சுய உணர்வு பெற்றுத் தன் நிலைக்குத் திரும்பினள். அவள் எழுந்து நின்று கைகளைக் கூப்பி ஆஞ்சனேயரிடம் பின்வருமாறு பேச ஆரம்பித்தாள்:

''பிரம்மதேவன் இராவணனுக்கு வரம் கொடுத்தபோது, இராவணனின் ஆட்சி

ஒழிந்து எப்போது அரக்கர் இனத்தின் அழிவு ஆரம்பமாகும் என்பதற்கு என்னிடம் ஒரு தடயம் கூறினார். அதாவது இராவணனின் இலங்கையைக் காவல் காக்கும் நோக்கத்துடன் சிருஷ்டிக்கப்பட்ட நான், என்றைய தினம் ஒரு குரங்கால் அடித்து வீழ்த்தப் பட்டுத் தோல்வி அடைகிறேனோ அன்றைய தினமே இராவணனின் அழிவுக்காலம் நெருங்கிவிட்டதாக உணர்ந்து கொள்ளும்படி பிரம்மதேவர் என்னிடம் தெரிவித்திருக்கிறார். இன்று உன்னால் நான் தோற்கடிக்கப் பட்டேன். கெட்ட புத்தியை உடைய இராவணன் இராமபிரானால் அழியப்போவது நிச்சயம். நீ வந்த காரியத்தில் வெற்றி பெறுவாய் என்பதில் சந்தேகமே இல்லை. என் பிரிய ஆஞ்சனேயனே ! இராமபிரானின் தூதுவனாகிய உன்னைத் தரிசித்ததன் பயனாக நான் மிகுந்த புண்ணியம் சம்பாதித்தவள் ஆகிறேன்.

‘‘குழந்தாய், தராசின் ஒரு தட்டில் சுவர்க்கலோக இன்பங்களையும் மறுதட்டில் ஒரு கணம் மட்டுமே கிடைக்கும் ஞான ஆசார்யனின் சம்பந்தத்தால் ஏற்படும் சுகத்தையும் வைத்தால், இரண்டாவது முதலாவதை விஞ்சிவிடுகிறது. இராம பிரானின் அருட்பார்வை யார் மீது படுகிறதோ அவர்களுக்கு விஷமும் அமிர்தம் ஆகிவிடும். விரோதியும் நண்பன் ஆகிவிடுவான். தாண்டவே முடியாத கடலும் பசுவின் குளம்படி போல ஆகிவிடுகிறது. ஏன், மேரு மலைகூட அவர்களுக்குச் சிறிய மணலுக்குச் சமமாகும்’’ என்று பல விதங்களிலும் இராம பிரானைப் புகழ்ந்தும் ஆஞ்சனேயரைப் போற்றியும் இலங்கிணி அனுமனை உள்ளே செல்ல அனுமதித்து அங்கிருந்து மறைந்தாள்.

4

மேலே சொல்லப்பட்ட சிம்ஹிகா தமோகுணத்தைக் குறிப்பிடுகிறது. இலங்கிணி ரஜோகுணத்தையும், சுரஸா சத்துவ குணத்தையும் குறிப்பிடுகின்றன. இந்த மூன்று குணங்களையும் தாண்டி, ஆசார்ய ஆஞ்சனேயர் தேவியைத் தரிசிக்கப் பெற்றார்.

அழிவுக்குக் காரணமான தமோ குணத்தை அழிக்க வேண்டும். ஆகவே தம்மை அழிக்க வந்த சிம்ஹிகாவை ஆஞ்சனேயர் அழித்துவிட்டார்.

ரஜோகுணம் காரியங்களுக்குப் பயன் படும். அது தமோகுணத்திற்கும் சத்துவ குணத்திற்கும் இடையில் இருக்கிறது. சற்றுக் கவனிக்கத் தவறினால் கீழே போய்த் தமோ குணமாக ஆகிவிடும். முயற்சி செய்தால், அதைக் கெடுதல் செய்யாத சத்துவகுணமாக மாற்றிக் கொள்ளலாம்.

ஆசார்ய ஆஞ்சனேயர் பலமாக அடித்த போது அவருடைய முஷ்டி இலங்கிணியின் கன்னத்தில் பட்டதால் ஆசார்யனின் ஸ்பரிசம் அவளுக்குக் கிடைத்தது. அது காரணமாக ரஜோகுணத்தின் கெட்ட புத்தி இரத்தமாகக் கக்கி வெளிப்பட்டுவிட்டது. அதைத் தொடர்ந்து, பூரண சத்துவகுணத்தைப் பெற்ற அவள், ஞானம் எய்தினாள். சத்துவகுணம் பெற்றதனால்தான் பகவானை அவளால் புகழ முடிந்தது. ரஜோகுணம் பாதகமான விளைவை உண்டுபண்ணாது என்பதால், ரஜோகுணமாகிய இலங்கிணியை ஆஞ்சனேயர் கொல்லாமல் சத்துவகுணமாகச் சற்றுத் திசைமாற்றி விட்டுவிட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகளில் ‘மூன்று திருடர்கள்’ என்னும் ஒரு கதையும் இடம் பெற்றிருக்கிறது. பரமஹம்சர் அந்தக் கதையில் முக்குணங்களையும் மூன்று திருடர்களுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். அவர், ‘‘சத்துவகுணம் கடவுளின் இருப்பிடத்தை, ‘அதோ’ என்று தூரத்திலிருந்து சுட்டிக் காட்டுமே தவிர, பரம்பொருளின் சந்நிதானத்திற்கே அழைத்துச் செல்லாது’’ என்பதை விளக்குகிறார்.

சத்துவகுணம் ஓரளவிற்கு நன்மையே செய்கிறது. ஆனால் சாமர்த்தியமாக அதையும் தாண்டி வந்தால் தேவியைத் தரிசிப்பதற்கு வேறு தடையே இல்லை.

சுரஸா, இராம காரியமாகச் சென்ற அனுமனை அழிக்கவோ அல்லது கெடுதல் செய்து தடுத்து நிறுத்தவோ வரவில்லை. தேவர்களால் அனுப்பப்பட்டு, ஆஞ்சனேயரைச் சோதித்துப் பார்க்கவே அவள் வந்தாள். ஆகவே சத்துவகுணமாகிய அவளிடமிருந்தும் ஆஞ்சனேயர் தப்பி வந்தார்.

இவ்விதம் இராமபக்தனும் ஆசார்யனுமாகிய அனுமன் சத்துவ - தமோ - ரஜோ - குணங்களைக் கடந்து சென்று, பரம்பொருளாகிய அன்னை ஸ்ரீசீதாதேவியின் தரிசனம் பெற்றார். *

* சுவாமி ஆத்மானந்தர், மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நிகழ்த்திய தொடர்ச் சொற்பொழிவிலிருந்து ஜயா என்ற அன்பர் எழுதியது.



மனிதனும் கர்மவிதியும்

திருமதி கோகிலா காளஹஸ்தி

ஓர் அரசகுமாரனாகப் பிறந்த உன்னைச் சிறுவயதில் யாரோ கடத்திச் சென்றுவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்நியர் மத்தியில் நீ வளர்க்கப்படுகிறாய். பிறகு நாவிதனின் தொழிலில் ஈடுபடுகிறாய். உன் குழந்தைப் பருவத்தைப் பற்றிய ஞாபகம் உனக்குத் தெளிவாக இல்லை. என்றாலும் சில சந்தர்ப்பங்களில் நீ ஆழ்ந்து சிந்திக்கிறாய். 'நான் உண்மையில் நாவிதன் அல்ல; நான் ஓர் அரசகுமாரன். இந்த நாவிதன் தொழில் எனக்கு உரியதல்ல' என்று ஏறக்குறையத் தெரிந்துகொள்கிறாய். பிறகு நீ அரசிளங்குமரன் என்ற உரிமையை நிலைநாட்டுவதற்கு உரிய முயற்சிகளில் ஈடுபடுகிறாய்.

இதே போலத்தான் நாமும் நாவிதன் தொழில் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் அடிக்கடி நமது உள்ளுணர்வின் ஆழத்திற்குப் போகிறோம். தற்சமயம் நாம் ஏற்றிருக்கும் பாத்திரம் உண்மையில் நமக்கு உரியதல்ல என்று உணர்கிறோம். நமது உண்மையான தன்மையைப் பற்றித் தெளிவில்லாத மங்கலான ஞாபகம் ஏற்படுகிறது. எங்கோ, ஏதோ அடங்கியிருக்கிறது; அதை நாம் அறிந்துகொள்ள முடியுமானால் தற்சமயம் நம்மைக் கட்டுப்படுத்தி வைத்துள்ள எல்லாவித வரம்புகளையும் உடைத்து எறிந்துவிட்டு நாம் செல்ல முடியும் என்று உணர்கிறோம். பிறப்பும் மரணமும் தொட இயலாத ஆத்மாவே நமது உண்மைச் சொரூபம். என்றாலும் பாரம்பரியம், சுற்றுப்புறச் சூழ்நிலை என்னும் இவை போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட இப்போதைய வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட மாந்தராக இருந்துகொண்டிருக்கிறோம்.

இப்போதைய நமது உள்ளத்தின் வரம்புகளுக்கும் மாறுபாடுகளுக்கும் கர்மவிதி தர்க்க ரீதியான விளக்கம் கொடுக்கிறது.

எப்படி இருந்தாலும் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதன் ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து வந்துவிடவில்லை. ஏனென்றால், ஆத்மாவின் மிகவும் முக்கியமான தன்மை 'அது வரம்பற்றது' என்பதுதான். உண்மையில், ஆத்மாவாகிய நமது துவக்கம் நாம் மனிதராகப் பிறக்கும்போது ஏற்பட்டதல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பல மாறுபட்ட சந்தர்ப்பங்களில் அதாவது நிலைகளில் மனித ஆன்மா இருந்திருக்கிறது. முந்திய பிறவிகளைப் பற்றி இது உணர்வின் மிக்க ஆழத்தில் பதித்து வைத்திருந்தபோதிலும் சில காரணங்களை முன்னிட்டு அவற்றை மறந்துவிட்டது. நமது உள்ளுணர்வில் பதிந்துள்ளவற்றினால் தான் நமது தற்கால வாழ்க்கை அடக்கி வழி நடத்தப்படுகிறது — இந்தக் கருத்து மக்களிடையே காணப்படும் பலவித வேறுபாடுகளுக்கும் நல்ல விளக்கம் தருகிறது. பாரம்பரியத்தாலும் சூழ்நிலையாலும் வேறுபாடுகள் ஏற்படுவதே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் இவற்றினால் பாதிக்கப்படாமலும்கூடச் சில ஆழ்ந்த தன்மைகள் நம்மிடம் இருக்கவே செய்கின்றன.

'நீ ஏன் ஆணாகவோ பெண்ணாகவோ, வறுமை நிலையிலோ செல்வ நிலையிலோ பிறந்திருக்கிறாய்?' என்று உன்னை நீயே கேட்டுக்கொள்ளலாம். இத்தகைய வேற்றுமைகளைப் புரிந்துகொள்ள இயலாத திரைக்குப் பின்னால் ஒரு காரணம் இருக்கிறது. அதைக் 'கர்மபலன்' என்று நமது முன்னோர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''கர்மபலனை ஒப்புக்கொண்டால் சுயமுயற்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இடம் இல்லாமற் போய்விடுகிறது. ஆகவே கர்மபலன் என்னும் கருத்தையே கைவிட்டுவிட வேண்டும். வாழ்க்கை ஒரு யந்திரம் போன்றது. மனிதன் வேறு எந்த வித உதவியும் இல்லாத ஓர் உயிர். ஏதோ ஒரு காரணத்தினால் தீர்மானிக்கப்பட்ட

விதிக்கு அவன் உட்பட்டாக வேண்டும்'' என்று சொல்லும் பலரையும் நாம் சமுதாயத்தில் பார்க்கிறோம். இத்தகைய கருத்துக்களை உடையவர்கள் கர்மவிதியைப் புரிந்துகொள்ளாதவர்களே ஆவர்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விதி என்பது வேறு; கர்மம் என்பது வேறு. விதியுடன் கர்மத்தை அடிக்கடி தவறுதலாகக் குழப்பிக்கொள்வதும் நம்மிடையே இருக்கிறது. ஒருவிதத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போல இருப்பினும், கர்மத்துக்குத் தனிப்பட்ட இயல்பும் உண்டு; அதாவது ஒருவன் தானே செய்த சொந்தக் கர்மத்தின் பலன்தான் கர்மம்.

உதாரணமாக, நான் ஒரு கப்பலில் அட்லாண்டிக் கடலைக் கடந்துகொண்டிருக்கிறேன் என்றும், என் பணத்தை நானே கடலில் தூக்கி எறிகிறேன் என்றும் வைத்துக் கொள்ளலாம். என்னுடைய இந்தச் செயலுக்குப் பயன் உண்டு. கப்பலில் மேற்கொண்டு எனக்கு ஏற்படும் செலவுக்குப் பணம் இல்லாமலிருப்பேன். நான் கரையிறங்கும்போது சல்லிக்காசுகூட இல்லாதவனைத்தான் இருப்பேன். என் நிலையைப் பார்ப்பவர், ''பாருங்கள் பாவம்! இவன் எப்படிப்பட்ட ஒரு துரதிர்ஷ்டத்தில் இருக்கிறன்!'' என்று சொல்வார்கள். அவர்கள் அப்படித் தான் சொல்வார்கள். ஏனென்றல், நானே என்னுடைய எல்லாப் பணத்தையும் கடலிலே வீசி எறிந்துவிட்டேன் என்பது அவர்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட ஒரு துரதிர்ஷ்ட நிலைக்கு என் செயலைத் தவிர வேறு எதுவும் காரணம் இல்லை. கர்மபலனைப் பற்றிய உண்மையும் இதைப் போன்றது தான்.

முந்தைய வினைகளினல்தான் ஒவ்வொன்றுமே நிச்சயிக்கப்படுகிறது என்று கர்மவிதி கூறவில்லை. சில குணப்பண்புகளுடன் நாம் பிறந்திருந்தபோதிலும் வேறு சில புதிய குணப்பண்புகளையும் நமக்கு நாமே உருவாக்கிக் கொள்ளும் சுதந்திரம் உள்ளவர்களாகவே இருக்கிறோம் என்று கர்மவிதி தெரிவிக்கிறது. அமெரிக்காவில் குடியேறும் ஒருவன் பல நகைகளுடன் அந்த நாட்டில் நுழைகிறன் என்று வைத்துக்கொள்வோம். அந்த நாட்டில் இருக்கும்போது மேலும் அவனல் புதிய நகைகளைச் சேகரிக்க இயலாது என்று சொல்வதற்கில்லை. மாறாக இவ்விதம் மேலும் மேலும் நகைகளைச் சேகரிக்கும் வாய்ப்பு மிகவும் ஏராளமாகவே அவனுக்கு இருக்கிறது எனலாம். அவன் தன்னுடன் கொண்டுவந்த நகைகள் அந்த நாட்டில் அவனுடைய முன்னேற்றத்துக்கு உதவியாக இருக்கலாம். அவனுக்குச் சொந்தமான சிலவற்றை அவன் வீசி எறிந்துவிடவும் கூடும். இவ்விதம் இந்தப் பிறவியில் பழவினையை நீக்கிக்கொள்ளும் சுதந்திரம் நமக்கு நிச்சயமாக இருக்கிறது.

சஞ்சித கர்மம், க்ரியமாண கர்மம் (ஆகாமிய கர்மம்), பிராரப்த கர்மம் என்று கர்மவினையை வேதாந்த தத்துவம் மூன்று பிரிவுகளாகக் குறிப்பிடுகிறது. மறைந்திருந்து நம்மை அடக்குவதாகவும், இன்னும் பலன் தரும் நிலைக்கு வராததாகவும் இருப்பது சஞ்சித கர்மம். பலனைக் கொடுத்துக்கொண்டிருப்பது க்ரியமாண கர்மம். ஏற்கனவே பயனைக் கொடுத்துவிட்டது பிராரப்த கர்மம். இந்த மூன்றுவிதக் கர்மவினைகளும் பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு வில்லாளி ஓர் அம்பை எய்கிறன். அவ்விதம் ஏற்கனவே எய்து முடிக்கப்பட்ட அம்பு, பிராரப்த கர்மத்துடன் ஒப்பிடப்படுகிறது. அந்த அம்பின் மீது அவனுக்குச் சுதந்திரம் (ஆதிக்கம்) போய்விட்டது. அந்த அம்பு தன் வழியே சென்று நன்மை அல்லது தீமையை விளைவிக்கும்.

அதே வில்லாளி தன் கையில் மற்றேர் அம்பை வைத்திருக்கிறன். அதைக் குறி வைத்து எய்யத் தயாராக இருக்கிறன். இந்த அம்பை எப்படி வேண்டுமானுலும் பயன்படுத்தக் கூடிய சுதந்திரம் அவனுக்கு இருக்கிறது. இந்த இரண்டாவது அம்பு க்ரியமாண கர்மத்தைக் குறிப்பிடுகிறது.

அந்த வில்லாளி தன் தோளில் உள்ள அம்பருத்தூணியில் மேலும் சில அம்புகளை வைத்திருக்கிறன். இன்னும் பயன்தர ஆரம்பிக்காத இவற்றைச் சஞ்சித கர்மத்துடன் ஒப்பிடலாம்.

ஆகவே, க்ரியமாண கர்மத்தையும் சஞ்சித கர்மத்தையும் நாம் நமது முயற்சி

யினால் அடக்கி நடத்த முடியும். பிராரப்த கர்மத்தைத்தான் நாம் அவ்விதம் அடக்கி நடத்த முடியாது. பிராரப்த கர்மத்தைப் பொறுத்தவரையில் மனிதன் தனது இயலாமையை உணர்கிறான். இதைத்தான் அவன் 'ஏற்கனவே விதிக்கப்பட்டது' என்கிறான். பிராரப்த கர்மம் காரணமாகத்தான் ஒருவன் செல்வாக்கு உள்ள நிலையிலோ, வறுமை நிலையிலோ, குறிப்பிட்ட ஒரு பாரம்பரியத்திலோ அல்லது வேறுவிதமான சூழ்நிலையிலோ — இவை போன்ற வேற்றுமைகளில் ஏதேனும் ஒன்றுடன் அல்லது பலவற்றுடன் பிறக்கிறான்.

<u>அருள்நெறிக் கதை:</u>



ஆசையும் அழிவும்

பிரம்மசாரி முத்துக்குமார்

செய்யும் செயலை இடம் அறிந்து செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் துன்பமே விளையும் என்ற உண்மையை, புத்தர் அருளிய இந்த ஜாதகக் கதை விளக்குகிறது.

பிரம்மதத்தன் என்ற அரசன் காசியை ஆண்டு வந்த சமயத்தில் அங்கு ஒரு பிராம்மணன் வாழ்ந்து வந்தான். அந்தப் பிராம்மணனுக்கு விடப்பா என்ற ஒரு வகையான மந்திரம் தெரியும்.

கிரகங்கள் குறிப்பிட்ட ஒரு நிலையில் ஒன்றுசேரும் நேரத்தில் இந்த விடப்பா என்ற மாய மந்திரத்தை ஜபித்தால் தேவலோகத்திலிருந்து தங்கம், வெள்ளி, முத்து, பவழம், மரகதம் முதலிய விலையுயர்ந்த ஏழு வகையான பொருள்கள் மழையாகப் பொழியும். எனவே இந்த மாயவித்தை விலைமதிப்பற்ற பொக்கிஷமாகக் கருதப்பட்டது.

அந்த நாளில் போதிசத்துவர் (புத்தரின் பல பிறவிகளில் ஒன்று), இந்த விடப்பா—பிராம்மணனுக்குச் சீடராக இருந்தார். ஒரு நாள் போதிசத்துவரும் அவருடைய குருவும், சீதி என்ற ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் காட்டுப் பாதையில் சில மைல் தூரம் கடந்து போகவேண்டியிருந்தது. அந்தக் காட்டில் ஐந்நூறு திருடர்களைக் கொண்ட கொள்ளைக் கூட்டம் வாழ்ந்து வந்தது.

காட்டுப் பாதையில் சென்றுகொண்டிருந்த போதிசத்துவரையும் விடப்பா-பிராம்மணனையும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் சூழ்ந்து பிடித்துக் கொண்டனர்.

கொள்ளைக் கூட்டத்தினர் புதுவகையான ஒரு திருட்டுமுறையைக் கையாண்டு வந்தனர். அவர்கள் இரண்டு பேரைப் பிடிக்க நேர்ந்தால் அவர்களில் ஒருவரைத் தங்களிடம் வைத்துக்கொண்டு, மற்றவரை அனுப்பிக் குறிப்பிட்ட தொகையைக் கொண்டு வந்து கொடுத்த பிறகு, தங்களிடம் உள்ளவரை மீட்டுப் போகும்படி ஏவுவார்கள். தகப்பனையும் மகனையும் பிடிக்க நேர்ந்தால், மகனைத் தங்களிடம் வைத்துவிட்டு, அவனை மீட்டுக்கொண்டு போகப் பணத்தை எடுத்து வந்து தரும்படி தகப்பனை அனுப்பி வைப்பார்கள். குருவும் சீடருமாக இருந்தால், குருவைத் தங்களிடம் வைத்துக் கொண்டு சீடனை அனுப்புவார்கள்.

விடப்பா-பிராம்மணனையும் போதிசத்துவரையும் பிடித்த கொள்ளைக் கூட்டத்தினர் பிராம்மணனை வைத்துக்கொண்டு, போதிசத்துவரைப் பணம் எடுத்து வந்து தந்த பிறகு குருவை மீட்டுக்கொள்ளும்படி சொன்னார்கள்.

திருடர்களின் கையில் சிக்கிய பிராம்மணன் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தான். குருவின் பதற்ற நிலையைக் கண்ட போதிசத்துவர், ``குருதேவா! பயப்

படாதீர்கள். தங்களை மீட்டுக்கொண்டு போக இன்னும் இரண்டொரு நாளில் பணத்துடன் திரும்பி வருவேன். ஆனால் முக்கியமான ஒரு விஷயத்தைத் தங்களிடம் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் தங்கம், வெள்ளி முதலிய ஏழு விதமான பொருள்களை மழையாகப் பெய்விக்கும் கிரகங்கள் கூடியிருக்கின்றன. அதற்கு உரிய மந்திரத்தை உச்சரித்து அந்தப் பொருள்களை மழையாகப் பெய்வித்தால், அது காரணமாக உங்களுக்கும் இந்தக் கொள்ளைக் கூட்டத் தாருக்கும் அழிவே ஏற்படும்'' என்று மிகவும் பணிவுடன் எச்சரிப்பது போலச் சொல்லி விட்டு, திருடர்களின் கையில் சிக்கியிருந்த குருவை மீட்கத் தேவையான பணத்தைத் தேடிப் புறப்பட்டார்.

மாலை சாய்ந்ததும் விடப்பா-பிராம்மணன் தப்பிவிடாமல் இருப்பதற்காகத் திருடர்கள் அவனுடைய கைகால்களைக் கட்டிப் போட்டார்கள். சிறிது நேரத்துக்குள் பூர்ண சந்திரன் உதயமாகிக்கொண்டிருந்தது. அப்போது கிரகங்களின் நிலையை அறிந்து கொண்ட பிராம்மணன், 'குறிப்பிட்ட சில கிரகங்கள் ஒன்றுசேரப் போகின்றன' என்பதைத் தெரிந்துகொண்டான்.

'நான் ஏன் இப்படித் துன்பப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டும்? கிரகங்கள் ஒன்றுசேரும் இந்த நல்ல நேரத்தில் மந்திரத்தை உச்சரித்துப் பொன்மழையைப் பெய்வித்து, அதன்மூலம் திருடர்கள் கேட்கும் பொருள்களைக் கொடுத்துவிட்டு இந்தத் துன்ப நிலையிலிருந்து விடுபட்டுப் போகலாமே' என்று நினைத்தான்.

விடப்பா - பிராம்மணன் திருடர்களை நோக்கி, ''நண்பர்களே, என்னை ஏன் இப்படிக் கைதியாகப் பிடித்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''பெரியவரே, இது தெரியாதா உங்களுக்கு? உங்கள் சீடன் பணம் கொண்டுவந்து கொடுத்து உங்களை மீட்டுக்கொண்டு போவதற்காகத்தான் உங்களை இங்கே பிடித்து வைத்திருக்கிறோம்'' என்று கொள்ளைக் கூட்டத்தினர் பதில் சொன்னார்கள்.

''ஓ! பணம்தானே உங்களுக்குத் தேவை? உங்களுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் தருகிறேன். இப்போதே என் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, நீராட அழைத்துச் செல்லுங்கள். எனக்குப் புதிய ஆடைகளை அணிவியுங்கள். மலர்களையும் வாசனைத் திரவியங்களையும் கொண்டு வந்து தாருங்கள். பிறகு என்னைத் தனியாக ஓரிடத்தில் விட்டுவிடுங்கள். அப்படிச் செய்தால் உங்களுக்குத் தேவையான பணம் கிடைக்க வழி செய்கிறேன்'' என்று பிராம்மணன் பதில் சொன்னான்.

பிராம்மணன் சொன்னது போல எல்லா ஏற்பாடுகளையும் திருடர்கள் செய்து தந்து, அவனைத் தனியாக ஓர் இடத்தில் இருக்கச் செய்தார்கள். பிராம்மணன் தன் பார்வையை வானத்தை நோக்கித் திருப்பி, பொன்மழையைப் பெய்விக்கும் அந்த மாயமந்திரத்தை உச்சரித்தான்.

என்ன ஆச்சரியம்! உடனே வானத்திலிருந்து தங்கம், வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருள்கள் யாவும் அந்த இடத்தில் மழையாகப் பொழிந்தன. திருடர்களுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவர்கள் தங்கக் கட்டிகளையும் மரகதமணிகளையும் மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

திருடர்களிடமிருந்து விடுபட்ட பிராம்மணன் அதே பாதையில், தான் போக வேண்டிய ஊருக்குத் திருடர்களைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான்.

திருடர்கள் தங்கம், வெள்ளி அடங்கிய மூட்டை முடிச்சுகளுடன் காட்டுப் பாதையில் போய்க்கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் திடீரென்று ஐந்நூறு திருடர்களைக் கொண்ட மற்றொரு திருடர் கூட்டம் அதே பாதையின் எதிர்த் திசையிலிருந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் பொன்மூட்டைகளுடன் இருந்த முதல் திருடர் கூட்டத்தை வளைத்துக்கொண்டு தாக்கத் தொடங்கினர்.

''எங்களை ஏன் தாக்குகிறீர்கள்?'' என்று முதல் கொள்ளைக் கூட்டத்தினர் இரண்டாவது கொள்ளைக் கூட்டத்தினரைக் கேட்டனர்.

''உங்களிடம் உள்ள பொருள்களைக் கொள்ளையடிக்கத்தான் தாக்குகிறோம்'' என்று இரண்டாவது கொள்ளைக்கூட்டத்தினர் பதில் சொன்னார்கள்.

''உங்களுக்குப் பணம் தேவையாக இருந்தால், அதோ எங்கள் பின்னால் வந்து

கொண்டிருக்கிறனே பிராம்மணன், அவனைப் பிடியுங்கள். அவன் வானத்தைச் சிறிது அண்ணாந்து பார்ப்பதன்மூலமே விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் மழையாகப் பெய்விக்கிருன். அவன்தான் எங்களுக்கு இந்த விலையுயர்ந்த முத்துக்களைக் கொடுத்தான்'' என்று தெரிவித்தார்கள்.

உடனே இரண்டாவது கொள்ளைக் கூட்டத்தினர் முதலாவது திருடர்கூட்டத்தைத் தாக்குவதை நிறுத்திவிட்டு, பாதையில் வந்து கொண்டிருந்த பிராம்மணனைப் பிடித்துக் கொண்டார்கள். ''எங்களுக்கும் விலையுயர்ந்த முத்துக்களை நீ கொடுத்தாக வேண்டும்'' என்று அதட்டினார்கள்.

''ஆகா! உங்களுக்கும் விலையுயர்ந்த முத்துக்கள் வேண்டுமா? இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும் செய்தியாயிற்றே! ஆனல் பொன்மழையைப் பெய்விக்கும் கிரகங்கள் ஒன்றுகூடுவதற்கு இனி ஒரு வருஷம் ஆகுமே! நீங்கள் இன்னும் ஒரு வருஷம் காத்



திருப்பதாக இருந்தால், குறிப்பிட்ட அந்தக் கிரகங்கள் ஒன்றுசேரும் நேரத்தில் நான் உங்களுக்கும் பொன்மழையைப் பெய்வித்து விலையுயர்ந்த மணிகளை எல்லாம் தருவேன்'' என்றுன் பிராம்மணன்.

''அடே துஷ்டப் பிராம்மணனே! அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் பணம் கேட்டவுடனே பொன்மழை பெய்வித்திருக்கிருய். நாங்கள் கேட்டால் ஒரு வருஷம் காத்திருக்க வேண்டும் என்கிருயே!'' என்று பிராம்மணனை அதட்டினார்கள். அதற்குள் அவர்களில் கோபம் கொண்ட ஒருவன், ஒரு வாளால் பிராம்மணனை இரண்டாக வெட்டிப் பாதையின் நடுவில் போட்டுவிட்டான்!

உடனே அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் சற்றுத் தூரத்தில் சென்றுகொண்டிருந்த முதலாவது கொள்ளைக் கூட்டத்தினரைத் துரத்திப் பிடித்தனர். சிறிது நேரத்துக்குள்ளாகவே முதலாவது கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர் அனைவரையும் அவர்கள் கொன்று குவித்தார்கள். முதல் கொள்ளைக் கூட்டத்தினரிடம் இருந்த விலையுயர்ந்த பொன், பண மூட்டைகளைச் சூறையாடினர்கள்.

பிறகு அந்தப் பொருள்களைத் தங்களுக்கிடையே பாகம் பிரித்துக்கொள்வதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. அது காரணமாக அவர்கள் இரண்டு பிரிவினராகப் பிரிந்து கொண்டார்கள். ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். ஐந்நூறு கள்வர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்தில் கடைசியாக ஐம்பது கள்வர்களே மிஞ்சினர்கள். அவர்களுக்குள்ளும் சிறுசிறு பிரிவுகள் ஏற்பட்டன. அவர்களும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொலை செய்தனர். இறுதியில் இரண்டு பேர் மட்டுமே உயிர் தப்பினர்கள். மற்றவர் அனைவரும் அழிந்தார்கள்.

உயிர் தப்பிய இரண்டு திருடர்களும், மிகுந்த சிரமத்துடன் கொள்ளையடித்த எல்லாப் பொருள்களுடன், பக்கத்திலிருந்த காட்டுக்குள் நுழைந்தார்கள். அங்கு மறைவான ஓர் இடத்தில் கொள்ளைப் பொருள்களை ரகசியமாகப் பதுக்கி வைத்தனர். அவர்களில் ஒருவன் கையில் கத்தியுடன் பொக்கிஷத்துக்குக் காவல் இருந்தான். மற்றொருவன் இரவு உணவுக்குத் தேவையான அரிசி வாங்கிச் சமைத்துக் கொண்டுவரக் கிராமத்துக்குச் சென்றுன்.

காட்டில் பொக்கிஷத்தைக் காத்திருந்த திருடனுக்கு ஒரு தீய எண்ணம் உண்டாயிற்று. 'கிராமத்துக்குச் சென்ற திருடன் உணவுடன் திரும்பி வந்ததும் பொக்கிஷத்தில் சரிபாதி பங்கு கேட்பான். அவன் இங்கு வந்தவுடனே அவனைக் கொன்றுவிட்டால்.... இந்தப் பொக்கிஷம் முழுவதும் எனக்கே சொந்தமாகிவிடும்' என்று நினைத்தான். தன்னுடைய 'நண்பன்' உணவுடன் திரும்பி

வந்ததும் அவனைக் கொல்வதற்கு வாளுடன் தயாராகக் காத்திருந்தான்.

அவன் நினைத்ததைப் போலவே, உணவுக்காகக் கிராமத்துக்குச் சென்றவனும் காட்டில் பொக்கிஷத்தைக் காவல் செய்யும் தன்னுடைய 'நண்பனை'க் கொன்றுவிட்டுப் பொக்கிஷம் முழுவதையும் தனக்கே உரிய தாக்கிக்கொள்ள நினைத்தான். 'நஞ்சு கலந்த உணவை அவனைச் சாப்பிடச்செய்து, அவனை அங்கேயே கொன்றுவிடுகிறேன். பிறகு பொக்கிஷம் முழுவதும் எனக்கே சொந்தமாகிவிடும்' என்று திட்டமிட்டான்.

அவன் தான் திட்டமிட்டபடியே உணவைச் சமைத்துத் தன் பங்கை அங்கேயே சாப்பிட்டான். 'நண்பனுடைய' உணவில் நஞ்சு கலந்து அவனுக்குக் கொடுப்பதற்காகக் காட்டுக்கு எடுத்துச் சென்றான்.

சிறிது நேரத்துக்குள் பொக்கிஷத்தை மறைத்து வைத்திருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் உணவுப் பொட்டலத்தைக் கீழே வைத்த தருணத்தில், அவனைக் கொல்ல வாளுடன் ஏற்கனவே காத்திருந்த திருடன் முதலாவது திருடனை வெட்டி வீழ்த்தினான். பிறகு கொல்லப்பட்ட திருடனின் உடலை மறைவான ஓர் இடத்தில் வைத்து மூடினான்.

உணவில் நஞ்சு கலந்திருக்கும் விஷயம் அவனுக்குத் தெரியாது. அவன் உணவுப் பொட்டலத்தை அவிழ்த்து உணவைச் சாப்பிட ஆரம்பித்தான். சிறிது நேரத்துக்குள் அவனும் அந்த இடத்திலேயே இறந்தான்.

மறுநாள் போதிசத்துவர் தம்முடைய குருவை மீட்பதற்காகப் பணத்துடன் காட்டுக்குள் திரும்பி வந்தார். ஆனால் அவருடைய குருவோ, கொள்ளைக்காரர்களோ அந்த இடத்தில் காணப்படவில்லை. அந்த இடத்தில் பொன்மழை பெய்ததற்கு அறிகுறியாக முத்துக்களும் மணிகளும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

அவற்றைப் பார்த்தவுடன் போதிசத்துவர் எல்லாவற்றையும் அறிந்துகொண்டார். 'நமது யோசனையைக் கேளாமல் குரு மந்திர சக்தியால் பொன்மழை பெய்வித்திருக்கிறார். அதன் விளைவாக அவருக்கும் ஏனைய திருடர்களுக்கும் அழிவு நேர்ந்திருக்கும்' என்று ஊகித்தார்.

சிறிது தூரம் சென்றவுடன் தமது குருவின் வெட்டுண்ட உடல் பாதையில் கிடப்பதை அவர் கண்டார். தமது ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் அவசரப்பட்டு இவ்விதம் நடந்துகொண்டதனால் குருநாதர் இறந்துவிட்டாரே என்று போதிசத்துவர் பெரிதும் வருந்தினார். பிறகு குருவின் உடலுக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தார்.

மேலும் சிறிது தூரம் அவர் பாதையில் நடந்து சென்றபோது முதலாவது திருடர் கூட்டத்தினர் வெட்டப்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டார். பின்னும் தொடர்ந்து நடந்த போது, இரண்டாவது கொள்ளைக் கூட்டத்தினரின் இறந்த உடல்களைக் கண்டார். பிறகு, முடிவில் உயிர் தப்பிய இரண்டு கள்வர்களையும் பொக்கிஷங்களை மறைத்து வைத்திருந்த இடம் வரையிலும் தடயங்களைப் பார்த்துக்கொண்டே சென்றடைந்தார். அங்கு உணவுத் தட்டுக்கு அருகில் திருடர்களில் ஒருவன் இறந்து கிடந்ததைக் கண்டார். நடந்த எல்லா விவரமும் போதிசத்துவருக்கு ஒரு நொடியில் புரிந்துவிட்டது.

மற்றொரு திருடன் அங்குக் காணப்படாததனால் அவனைச் சுற்றுப்புறங்களில் தேடினார். இறுதியில் மறைவான ஓர் இடத்தில் அவனுடைய உடல் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்.

'என் குருநாதர் என் யோசனையைக் கேட்காமலும், ஆராய்ந்து பார்க்காமலும் செய்த செயலினால் அவர் தமக்கும் மற்றவர்களுக்கும் அழிவையே தேடிக் கொண்டார்' என்று போதிசத்துவர் சிந்தித்தார். பிறகு பின்வருமாறு சொன்னார்:

''பிழையான ஆசையும், ஆராய்ந்து பாராத செயலும் அழிவுக்கே அழைத்துச் செல்லும். அதன் மூலம் நன்மை எதுவும் விளைவதற்கில்லை. கள்வர்கள் பிராம்மணனையும் கொன்றதோடு தங்களையும் அழித்துக்கொண்டார்கள்.

''என் குருவின் எண்ணங்கள் தவறான பாதையில் திருப்பப்பட்டன. தம்மை காத்துக் கொள்ள அவர் செய்த முயற்சி அறிவில்லாத

செயலாக அமைந்தது. அது அவருடைய உயிரைப் பலி வாங்கியதோடன்றி அவருடன் இருந்த மற்றவர்களுக்கும் அதோகதியையே உண்டாக்கியது.''

''அதுபோலவே எந்த மனிதனுவது தவருன வழியில் தன் நலனைப் பெருக்கிக் கொள்ள நினைப்பானுனல், அவன் தான் அழிவதுடன் மட்டுமல்லாமல், மற்றவர் களையும் அழிவுக்கே அழைத்துச் செல்வான்.''

போதிசத்துவரின் இந்தச் சொற்கள் காடு முழுவதும் எதிரொலித்தன. இந்த உண்மையை அவர் போதித்தபோது வன தேவதைகள் கரகோஷம் செய்தனர்.

அங்கே திருடர்கள் மறைத்து வைத் திருந்த முத்துக்களையும் மணிகளையும் போதிசத்துவர் தமது இடத்துக்கு எடுத்துச் சென்ருர். அந்தச் செல்வம் முழுவதையும் தான தர்மங்களுக்கும் பல நல்ல காரியங் களுக்கும் செலவிட்டார். அவருடைய உலக வாழ்வு முடிந்தபோது தமது நல்ல செயல்கள் காரணமாக மேலுலகத்தை எய்தினர்.



விதுர நீதி

'நம்பி'

புத்திமானுகிய விதுரர் திருதராஷ்டிர மன்னனுக்கு வழங்கிய சில அறிவுரைகள் இந்தப் பகுதியில் இடம் பெறுகின்றன.

மூடன்

சாஸ்திரப் பயிற்சி இல்லாமல் அகந்தை யுடன் இருப்பவனும், வறியவனுக இருந்தும் ஊதாரித்தனமாகச் செலவழிப்பவனும், இழிந்த வழியில் செல்வத்தை ஈட்ட விரும்பு கிறவனும் மூடன் ஆவான் என்று பண்டி தர்கள் கூறுகின்றனர்.

எவன் தன் காரியத்தை விட்டுப் பிறர் காரியத்தைச் செய்கிருனே, நண்பனிடம் எவன் கபடமாக நடந்துகொள்கிருனே அவன் மூடன் ஆவான்.

தன்னை விரும்பாதவர்களை எவன் விரும்புகிருனே, விரும்புகிறவர்களை விட்டு விடுகிருனே, வலியவனைப் பகைத்துக் கொள்கிருனே அவன் மூடன் ஆவான்.

நண்பனைப் பகைவனுகக் கருதி அவனுக் குத் தீங்கு செய்பவன், பகைவனை நண்ப னுகக் கருதுபவன், தீய செயலைச் செய்பவன் ஆகியோர் மூடர் ஆவர்.

பிறரைக் கொண்டு காரியங்களைச் செய்பவன், எல்லாக் காரியங்களையும் சந்தே கிப்பவன், துரிதமாகச் செய்ய வேண்டிய காரியத்தைத் தாமதித்துச் செய்பவன் ஆகி யோர் மூடர் ஆவர்.

பித்ருக்களுக்குச் சிராத்தம் செய்யா தவன், தேவதைகளைப் பூசியாதவன், நல்ல மனமுடைய நண்பர்களைப் பெருதவன் ஆகியோர் மூடர் ஆவர்.

அழையாமலே செல்பவனும், கேளாமலே அதிகமாகப் பதில் சொல்பவனும், நம்பிக்கை கொள்ளத் தகாதவனிடம் நம்பிக்கை வைப் பவனும் மூடர் ஆவர்; கெட்டவரும் ஆவர்.

தன்னிடம் இருக்கும் அதே குற்றம் பிறனிடம் இருப்பதைக் கண்டு எவன் அதை நிந்திக்கிருனே, ஆற்றல் இல்லாதவனுக இருந்துகொண்டு எவன் கோபம் கொள் கிருனே அவன் அதிக மூடன் ஆவான்.

தன் பலத்தை அறியாதவனும், அறம் பொருள் இல்லாததும் அடைய முடியாதது மான ஒன்றை முயற்சி இல்லாமலே அடைய விரும்புகிறவனும் மூடர் ஆவர்.

உபதேசிக்கத் தகாதவனுக்கு உபதேசிப்பவன், உபதேசிக்க வேண்டியவனுக்கு உபதேசியாதவன், உலோபியை அடுத்து வாழ்வோர் மூடர் ஆவர்.

கொடியவன்

சிறந்த உணவைத் தன்னை அடுத்து இருப்பவர்களுக்குக் கொடாமல் எவன் தானே உண்கிறானோ, எவன் சிறந்த உடைகளைத் தான் ஒருவனாக உடுத்துக்கொள்கிறானோ, அவனைக்காட்டிலும் கொடியவன் அதாவது மூடன் எவனும் இல்லை.

புத்திமான்

வில்லாளி எய்த அம்பு ஒருவனைக் கொல்லலாம்; அல்லது கொல்லாமலும் இருக்கலாம். ஆனால் புத்திமான் பயன்படுத்தும் அறிவு, அரசனையும் அரசையும் அழித்துவிடும்.

ஒரு புத்தியால் காரியம் அகாரியம் இரண்டையும் நிச்சயிக்க வேண்டும்.

நண்பன், பகைவன், அக்கறை இல்லாதவன் ஆகிய மூவரையும், சாமம் தானம் பேதம் தண்டம் என்ற நான்கு உபாயங்களால் வசப்படுத்த வேண்டும்.

புலன் ஐந்தையும் அடக்கி வெல்ல வேண்டும்.

சந்தி, விக்கிரகம் முதலான ஆறையும் அறிய வேண்டும்.

பெண், சூது, வேட்டையாடுதல், கடுஞ்சொல், கொடிய தண்டனை, செல்வத்தை வீண் விரயம் செய்தல் ஆகிய ஆறையும் தவிர்த்தால் நன்மை உண்டு.

விஷம் ஒருவனைக் கொல்லும்; ஆயுதமும் ஒருவனைக் கொல்லும். தவறான ஆலோசனையோ அரசையும் குடிமக்களையும் அரசனையும் கொல்லும்.

ருசியான உணவை ஒருவனாக உண்ணுதல் கூடாது; ஒருவனாக விஷயங்களை ஆலோசிக்கக் கூடாது; ஒருவனாகத் தனிவழி போகக் கூடாது. தூங்கிறவர்களின் நடுவில் ஒருவனாக விழித்திருக்கக் கூடாது.

பொறுமை

பொறுமையுள்ளவனை ஆற்றல் இல்லாதவனாக மக்கள் நினைக்கிறார்கள். அது ஒன்று மட்டுமே அதிலுள்ள குறைபாடு; மற்றக் குறைபாடு எதுவும் இல்லை.

அதை ஒரு குறைபாடாகக் கருதக் கூடாது. பொறுமை என்பது பெரிய பலம் ஆகும்.

ஆற்றல் இல்லாதவர்களுக்குப் பொறுமை குணமாகிறது; ஆற்றல் உள்ளவர்களுக்குப் பொறுமை அணியாக அமைகிறது.

பொறுமைக்கு வசப்படுத்தும் ஆற்றல் உண்டு. பொறுமையினால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை.

பொறுமை என்ற கத்தியை வைத்திருப்பவனைத் தீயவன் எதுவும் செய்ய முடியாது.

கூளம் இல்லாத இடத்தில் விழுந்த தீ தானே அவிந்து போகிறது; பொறுமை இல்லாதவன் தனக்குத் தானே தீமைகளைத் தேடிக்கொள்கிறான்.

சிறந்த நான்கு

அறமே சிறந்த நன்மை; பொறுமை மேன்மையான அமைதி; வித்தையே மேலான திருப்தி; அஹிம்ஸையே சுகம் தருவது.

இரண்டு

பகையரசர்களிடம் பகைமை கொள்ளாத அரசனையும், தீர்த்த யாத்திரை செய்யாத பிராம்மணனையும், எலியைப் பாம்பு விழுங்குவது போல, பூமி விழுங்கிவிடுகிறது.

கடுமையாக ஒரு சொல்கூடச் சொல்லாமலும், சாரமில்லாத மனிதர்களைப் போற்றாமலும் இருப்பவன் விளக்கமடைகிறான்.

விரும்புகிறவற்றையே விரும்புகிற பெண், போற்றுகிறவர்களையே போற்றுகிற மூடன் ஆகிய இருவரும் பிறரை நம்பி வாழ்பவர்கள்.

பணமில்லாதவனுடைய ஆசையும், ஆற்றல் இல்லாதவனுடைய கோபமும் உடம்பை உலரச் செய்யும் முட்கள்.

முயற்சி செய்யாத இல்லறத்தான், காரியங்களில் ஈடுபட்டுள்ள துறவி ஆகிய இருவரும் மாறுபட்ட செய்கைகளின் வினையாக விளக்கமடைவதில்லை.

ஆற்றலுள்ளவனாக இருந்தும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் அரசன், வறியவனாக இருந்தும் தானம் செய்கிறவன் ஆகிய இருவரும் சொர்க்கத்தின் மேல்நிலையில் இருக்கிறார்கள்.

நியாயமாகக் கிடைத்த பொருளைத் தக்கோருக்குக் கொடாமல் இருப்பதும் தகாத

வருக்குக் கொடுப்பதும் தவருன நடைமுறையாகும்.

தானம் செய்யாத பணக்காரனையும், தவம் செய்யாத தரித்திரனையும் பாரமான கல்லைக் கழுத்தில் கட்டி நீரில் போட்டுவிட வேண்டும்,

யோகபலமுள்ள விருந்தாளியும், போரில் முன்னணியில் இருந்து உயிர் துறந்தவனும் சொர்க்கத்தை அடைகிருர்கள்.

மூன்று

மனிதர்களில் உத்தமர், மத்திமர், அதமர் என மூன்று வகையினர் உண்டு. அவர்களை மூன்று விதமான தொழிலில் ஈடுபடுத்த வேண்டும்.

மகன், மனைவி, வேலைக்காரன் ஆகிய மூவரும் தமக்கென்று சொந்தமாகப் பணம் இல்லாதவர்கள்; அவர்களுக்குப் பணம் கிடைக்குமானுல், எவனுக்கு அவர்கள் உரியவரோ அவனுக்கே அந்தப் பணம் உரியது.

பிறர் பொருளை அபகரிப்பதும், பிறன் மனைவியை அனுபவிப்பதும், அன்புள்ளவனைப் புறக்கணிப்பதும் குற்றமாகும்.

காமம், குரோதம், லோபம் ஆகிய மூன்றும் நரகத்தின் மூன்றுவித வாயில்கள். ஆத்மாவின் அழிவுக்குக் காரணமான இந்த மூன்று குணங்களையும் தள்ளிவிட வேண்டும்.

<u>அற்புதத் திருவந்தாதி விளக்கம்:</u>

காரின் வடிவம்

வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

காரைக்கால் அம்மையார் இறைவனுடைய சடாபாரத்தினின்றும் தம்முடைய திருவிழியை எடுக்கவில்லை. அதையே பார்த்துக் கொண்டிருக்கிருர். இறைவனுடைய திருமுடியில் கொன்றை மலர் இருக்கிறது. அது பொன்னிறமுடையது; தளதளவென்று விரிந்து மலர்ந்திருக்கிறது.

கொன்றை மலரைப் பிரணவ புஷ்பம் என்று சொல்வார்கள். கேசரங்களோடு கூடிய அந்த மலர் ஓங்காரத்தைப் போலத் தோன்றுகிறதாம். ஆகையால் அதற்கு அந்தப் பெயர் வந்தது. அந்த மலரினுடைய தோற்றம் பிரணவத்தை நினைப்பூட்டுமானுல் அது பெரிய சிறப்பு அல்லவா?

இறைவனுடைய சடாமுடியில் இத்தகைய சிறப்பு வாய்ந்த கொன்றை மலர் தழைத்து விளங்குகிறது. அது இயற்கையாகவே பொன்னிறமும் ஓங்கார மலர் என்ற பெயரும் அமைந்து சிறப்புப் பெற்றிருக்கிறது. இப்போது இறைவனுடைய திருமுடிமேல் இருப்பதனுல் அந்தச் சிறப்புப் பின்னும் மிகுதியாகிவிட்டது. சிறப்புப் பல நிரம்பப்பெற்று, ஆர்ந்து, கொன்றை மலர் தழைப்புற்று விளங்குகிறது.

சீர் ஆர்ந்த, கொன்றை மலர்தழைப்ப.

இறைவன் திருமுடியில் கங்கை இருக்கிறது. அது எப்படி அங்கே வந்தது? வானுலகில் படர்ந்து ஓடிய ஆறு அது. அது தன் முன்னோர்களின் எலும்பு மேற் பாய்ந்தால் அவர்கள் நற்கதியடைவார்கள் என்று எண்ணி, பகீரதன் கங்கையை நோக்கித் தவஞ் செய்தான். கங்கை தோன்றி, "என்னைத் தாங்குவார் யார்?" என்று செருக்கோடு கூறினுள். பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். இறைவன் தோன்றி அவனுக்கு அருள் செய்தான். கங்கை ஆரவாரத்துடன் வந்தபோது அதைத் தன் சடையில் தாங்கிக் கொண்டான். வானுலகத்தில் உலாவி வெள்ளமாக நீர் நிரம்பிய அந்த ஆறு இறைவனுடைய சடா பாரத்தில் அடங்கிவிட்டது. கங்கை வெள்ளம் சடைக்குள் அடங்கி நிற்கிறது. பிறகு அதைப் பூமிக்குச் சிறிது விட்டான் இறைவன்.

சிவபெருமான் திருமுடியில் கங்கை இருக்கிறது. அது சேணில் உள்ள வானுலகத்தில் உலவி நீர் நிரம்பிய ஆறு. இப்போது அந்த வெள்ளம் இங்கே தேங்கி நிற்கிறது.

''சேண் உலவி
நீர்ஆர்ந்த பேரியாறு நீத்தமாய்.''

சிவபெருமான் சடைக் கற்றையையும் அதில் அவன் புனைந்திருக்கும் கொன்றை மலரையும் அங்குள்ள கங்கா நதியையும் அம்மையார் பார்க்கிறார். அவருக்குக் காட்டில் உள்ள கொன்றை நினைவுக்கு வருகிறது. அந்தக் கொன்றை கார்காலத்தில்தான் மலரும்.

''கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்'' என்று சங்கநூல் கூறுகிறது. கார் காலத்தில் மழை பெய்யும். வெள்ளம் ஓடும். கொன்றையும் நீர்வெள்ளமும் கார்காலத்துக்குரிய அடையாளங்கள்.

இறைவனுடைய சடை பொன்னிறமுடையது. அந்தச் சடையைப் பாம்பைக் கயிருகக் கொண்டு கட்டியிருக்கிறன். யாரையேனும் கண்டால் சீறும் பாம்பை வசப்படுத்திச் சடையைக் கட்டும் கயிறு போலச் செய்திருக்கிறன். அந்தக் கட்டு சடைக்குள் கொன்றைமலரும் நீர்வெள்ளமும் காட்சியளிக்கின்றன; கார்காலத்தை நினைப்பூட்டுகின்றன.

இறைவன் சடாபாரமே கார்காலத்தை நினைப்பூட்டிவிடுகிறது. அங்கேதானே கொன்றையையும் வெள்ளத்தையும் பார்க்கிறோம்? ஆகவே அந்தச் சடைமுடியையே கார்ப் பருவத்தின் வடிவம் என்று சொல்லிவிட்டால் என்ன? உற்றுக் கவனித்தால் இந்த உண்மை புலப்படும். ''ஆம்! நிச்சயமாக இது செவ்வையாகக் கார்ப் பருவத்தின் தோற்றந் தான். அதனுல்தான் அந்தப் பருவத்துக்கு உரிய அடையாளங்கள் இருக்கின்றன'' என்று எண்ணமிடுகிறார்.

''போர் ஆர்ந்த
நாண்பாம்பு கொண்டு அசைத்த
நம் ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேஒர் கார்''

என்று தம் கருத்தைச் சொல்லில் வடித்துவிடுகிறார்.

தம் உள்ளத்தில் இறைவன் திருவுருவத்தைத் தியானித்துத் தியானித்து அதில் ஆழ்ந்து ஈடுபடுகிறவராதலின் அந்தத் திருமேனியில் உள்ள அங்கங்களையெல்லாம் கண்டு கண்டு களிக்கிறார்; வருணிக்கிறார்; கற்பனையால் உவமை கூறுகிறார்; உருவகமாக்குகிறார். அவருக்கு இறைவனிடம் முறுகிய பக்தி இருப்பதால் அவருடைய அகக்கண்ணில் எப்போது வேண்டுமானாலும் இறைவனுடைய திருவுருவம் தோன்றுகிறது. சில சமயங்களில் ஏதேனும் ஓர் அங்கத்தில் மனத்தை நிறுத்தி அதிலேயே நின்று ஈடுபடுகிறார். திருவடியில் மனத்தை ஒடுக்கி இன்புறுவார். சிலகால் நீலகண்டத்தில் மனத்தைச் சலனமின்றி நிறுத்தி அதன் பெருமையிலே ஆழ்ந்து இன்புறுவார். திருமுடியிலே அகப் பார்வையைச் செலுத்துவார். இவை பக்தியால் விளைபவை. இதோடு நிற்கிறாரா?

அவருக்குத் தமிழ்க் கவிதை கைவந்த கலை. தம் அனுபவத்தையும் உணர்ச்சியையும் சொல்லிலே வடித்துத் தரும் ஆற்றல் அவருக்கு உண்டு. ஆதலால் தம் கற்பனைத் திறத்தைத் தூண்டிவிட்டு, அழகிய கவிதையில் தாம் காணும் காட்சிகளை ஓவியமாகக் காட்டுகிறார். இப்போது சடாபாரத்தைக் கார்காலத்தின் வடிவம் என்று கற்பனை செய்து பாடுகிறார்.

சீர்ஆர்ந்த கொன்றை
மலர்தழைப்பச் சேண்உலவி
நீர்ஆர்ந்த பேரியாறு
நீத்தமாய்ப்—போர்ஆர்ந்த
நாண்பாம்பு கொண்டு அசைத்த
நம்ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேஒர் கார்.

[சிறப்பு நிரம்பிய கொன்றைப்பூவானது தளதளவென்று மலர்ந்து விளங்க,வானுலகத்தில் ஓடி நீர் நிரம்பிய பெரிய ஆருகிய கங்கையானது வெள்ளமாக இங்கே தங்கியிருக்க, போர் செய்யும் இயல்பு நிறைந்த, கயிற்றைப் போன்ற பாம்பைக் கொண்டு கட்டிய நம் ஈசனுகிய சிவபெருமானுடைய பொன்நிறம் பெற்ற திருமுடிதான், காண்பவர்களுக்கு, நன்ருக ஒரு கார்காலப் பருவத்தின் வடிவே ஆகும்.

ஆர்ந்த—நிரம்பிய. தழைப்ப—அடர்ந்து மலர. சேண்—வானுலகம்; கங்கைக்கு வான் யாறு என்பது ஒரு பெயர். பேர்யாறு என்பது சந்தியில் பேரியாறு என்று வந்தது. நீத்த மாய்—ஓடிய நதி இங்கே தங்கியிருக்கும் வெள்ளமாகி; நீத்தமாக என்று திரித்துப் பொருள் கொள்ள வேண்டும். போர்—போர் செய்யும் பண்பு; ஆகுபெயர். அசைத்த—கட்டிய. செவ்வே—செவ்வையாக, சரியாக, நேராக. ஓர்—ஒப்பற்ற, கார்—கார்காலத்தின் வடிவம்; ஆகுபெயர். இறைவன் திருமுடி கார்காலத்தில் தோன்றும் பொருள்களை உடைமையால் அது காராகவே தோன்றுகிறது. காண்பார்க்கு என்பது கருத்தும் கண்ணும் இணையக் காண்பவர்களுக்கு என்று கொள்ள வேண்டும்.]

இது அற்புதத் திருவந்தாதியில் 53-ஆம் பாட்டு.

புதிய புத்தகங்கள்

பாரதியாரும் இராமகிருஷ்ணர் இயக்கமும்

[ஆசிரியர் : பெ. சு. மணி, வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம், 34, வடசூர் செல்வ விநயகர் கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004 ; பக்கங்கள் VIII+220. விலை : ரூ. 7-50]

இந்த நூல் பாரதியாரைப் புதிய கோணத்தில் முதல் முறையாக அறிமுகம் செய்கிறது.

பாரதத்தின் சரித்திரத்தில் சிறப்பு வாய்ந்த ஓர் அத்தியாயத்தைப் படைத்தவர் சுவாமி விவேகானந்தர். அவரது குரலாக விளங்கிய கவியரசர் பாரதியும் தமிழகத்தின் சரித்திரத்தில் சிறப்பு வாய்ந்த ஓர் அத்தியாயத்தைப் படைத்திருக்கிருர். இருவரும் தமிழுலகம் முழுமைக்கும் நன்கு அறிமுகமானவர்கள். ஆனால் இவர்களுக்கிடையில் எந்த விதத்தில் தொடர்பு உண்டு என்பது பெரும்பாலோருக்குத் தெரியாது.

விவேகானந்தரையும் மகாகவியையும் தனித்தனியாகப் படித்தவர்கள் உண்டு. இருவரையும் படித்தவர்கள் மிக மிகச் சிலரே ஆவர். இருவரையும் படித்த ஒருவர், இருவரிடமும் ஈடுபாடு கொண்ட ஒருவர் எழுதிய நூல் இது என்ற தனிச் சிறப்பு இந்த நூலுக்கு இருக்கிறது.

விவேகானந்த—பாரதியை மையமாகக் கொண்டு 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' சில கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது. ஆனால் 'புதிய அறம் பாட வந்த மறவர்கள்' இருவரையும் இணைத்துப் பல ஆதாரபூர்வமான தகவல்களோடு, ஆய்வு செய்து நூல்வடிவில் தரும் மிகப் பெரிய பணியைத் தமிழகத்தில் முதல் முறையாக அன்பர் திரு பெ. சு. மணி அவர்களே செய்திருக்கிருர்.

'எவ்வளவோ பேர் இங்கே வருகிருர்கள். ஆனால் நரேனுக்கு இணையானவர் ஒருவருமே இல்லை. அவன் ஒரு தனிப் பிரிவைச் சேர்ந்தவன்' என்று சுவாமி விவேகானந்தரைக் குறித்து ஸ்ரீராமகிருஷ்ண பகவான் குறிப்பிட்டார். இந்த உண்மை, தமிழகத்தின் நவீனக் கவிதையுலகில் பாரதி பெற்றுள்ள இடத்துக்கும் பொருந்தும். பாரதி, பல கவிஞர்களிடையே ஒரு தனிப் பிரிவைச் சேர்ந்தவராகவே, தனி ஒரு மனிதராகவே இருந்து கொண்டிருக்கிருர்.

பழைய தலைமுறையினரில் பரவலாக இந்திய மக்கள் சுவாமி விவேகானந்தரால் உத்வேகம் பெற்ருர்கள்; இதை நாம் அறிவோம் அந்தப் பெரிய வரலாற்று உண்மைக்குத் தமிழகத்தில் மிகச் சிறந்த உரைகல்லாகக் கவியரசர் திகழ்கிருர்.

குருதேவர் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், சுவாமி அபேதானந்தர், சகோதரி நிவேதிதை போன்றவர்களைக் குறித்த பாரதியின் விமரிசனங்கள் இந்த நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

விவேகானந்தரின் குரலாகத் தமிழகத்தில் எதிரொலித்த முதற் கவிஞர் மகாகவி பாரதிதாம். அதுமட்டுமல்ல, கடைசிக் கவிஞராகவும் இன்று வரையிலும் அவரே இருந்து கொண்டிருக்கிருர்.

இராமகிருஷ்ண—விவேகானந்த இலக்கியத்தில் இந்த நூல் மிக நல்ல ஒரு பொக்கிஷமாகச் சேர்ந்திருக்கிறது. ஞானச் சுடராகிய விவேகானந்தரின் ஆன்மிக மரபை ஏற்றுக் கொண்ட பாரதி, விவேகானந்தரின் குரலாக எதிரொலித்ததை நூல்வடிவில் தந்திருக்கும் ஆசிரியர் திரு பெ. சு. மணி அவர்களுக்குத் தமிழ் மக்களின் நன்றியும் வாழ்த்துக்களும் உரியன.—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிததத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 240 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை வினியோகிக்க விரும்பினல், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

1978 ஜூலை மாத நிகழ்ச்சிகள்

சத் சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 8 மணி வரை

மாலை 4 முதல் 4-20 வரை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (2-7-78, 16-7-78 & 30-7-78)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (9-7-78 & 23-7-78)

மாலை 4-20 முதல் 4-30 வரை தியானம்

மாலை 4-30 முதல் 5-30 வரை சொற்பொழிவு (தமிழ்)

1. ஸ்ரீமத் பாகவதம் — திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (2-7-78)
2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் — திரு வி. ஆர். கல்யாண சுந்தர சாஸ்திரிகள் (9-7-78)
3. ஸ்ரீமத் ராமாயணம் — டாக்டர் என். வீழிநாதன் (26-7-78 & 30-7-78)
4. ஸ்ரீ பூதத்தாழ்வார் — டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (23-7-78)

மாலை 5-35 முதல் 6-30 வரை சொற்பொழிவு (ஆங்கிலம்)

1. ஸ்ரீமத் பகவத்கீதை — சுவாமி கபீரானந்தர் (2-7-78, 9-7-78 & 23-7-78)
2. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் — சுவாமி தபஸ்யானந்தர் (16-7-78 & 30-7-78)

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள் — (மாலை 5-45 மணிக்கு)

திங்கள் : பக்தி யோகம் — சுவாமி அமிர்தானந்தர் (ஆங்கிலம்)
செவ்வாய் : ஸ்ரீமத் அத்தியாத்ம ராமாயணம் — சுவாமி கபீரானந்தர் (ஆங்கிலம்)
புதன் : மகாபாரதம் — திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (தமிழ்)
வியாழன் : ஸ்ரீமத் பகவத்கீதை — சுவாமி தன்மயானந்தர் (தமிழ்)
வெள்ளி : ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா (தமிழ்)
வெள்ளி : ஸ்ரீமத் பகவத்கீதை — (மாலை 6-30 மணிக்கு)

இடம் : ஸ்ரீராமகிருஷ்ண மந்திரம், 18, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி

சிறப்புச் சொற்பொழிவுகள் :

சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

1. பேரின்பமும் அதை அடையும் வகையும் — திரு சி. எஸ். பிள்ளை (1-7-78)
2. நாராயணீயம் — திரு ஆர். கோதண்டராமன் (8-7-78)
3. ஈசாவாஸ்ய உபநிஷதம் — சுவாமி கீர்த்திதானந்தர் (15-7-78 & 29-7-78)
4. ஸ்ரீமத் பாகவதம் —திரு பி. இராமகிருஷ்ணன் (22-7-78)

8-7-78 மாலை 6-30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண கதாம்ருதம் — சுவாமி அமலாத்மானந்தர் (இடம் : பெங்காலி அசோசியேஷன், 25, கிரி ரோடு, சென்னை-17)

விசேஷ தினங்கள் :

20-7-78 வியாழன் : குரு பூர்ணிமா
23-7-78 ஞாயிறு : அந்தர் யோகம் (சாதனை தினம்)

1-7-78, 16-7-78 & 30-7-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு வழக்கம்போல் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

தொலைபேசி : 71231

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ உண்மையைத் தவிர வேறு அழகு கிடையாது.

★ தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

★ கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும், முழு அளவில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

★ சுயமாகத் தியாகம் செய்யும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

★ மனதை அலட்டிக் கொள்வதைப் போல, உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை. கடவுளிடம் ஒருவனுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், அவன் எதை நினைத்தும் மனதை அலட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுவான்.